யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

# இன்ரறக்ட் கழகம்

# மகாஜன தீபம்

## சிறப்பு மலர்

1990 1995




இன்ரறக்ட் கழக வெளியீடு

மலர் சிறக்க மனம் உவந்து

வாழ்த்துகிறோம் !

அதி நவீன தொழில் நுட்ப முறையில்

வெளிப்புற உட்புற கலர்

புகைப்படங்கள் பிடிக்கவும்

மற்றும் திருமணக் கொண்டாட்டங்கள்

மங்கள நாள்கள் அனைத்திற்கும்

நாடவேண்டிய ஒரே ஒரு இடம்

# சிவம் படப்பிடிப்புக் கலையகம்

பிரபல வெளிக்களப் படப்பிடிப்பாளர்

## (K. B. S. PHOTO)

சிறுவிளான் இளவாலை

247, காங்கேசன்துறை வீதி, பெரியமதவடி,

உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

# MAHAJANA THEEPAM

# மகாஜன தீபம்

லோகேஸ்வரன்

## INTERACT CLUB OF MAHAJANA COLLEGE

## 94/95

The Interact Club of
J/MAHAJANA COLLEGE
Sponsered by the
ROTARY CLUB OF JAFFNA
1994 - 1995

24 - 05 - 1995

## கழகக் கீதம்

வண்புகழ்த் தெல்லிநம் நகரின்
மகாஜன இன்ரறக்ட் கழகம்
பண்பொளி பரப்பிப் பாரிற்
பயன்பல நல்கிடும் கழகம்.

தம்மைநன் குணர்ந்தே இணைந்து
தன்னல மற்றினி துழைத்து
தம்மையே உயர்த்திடும் வழியைத்
தருபயன் மிகுநற் கழகம்.

வாழிய இன்ரறக்ட் கழகம்
வையகம் வாழப்பல் ஊழி
அன்னையாழ் றோட்டறிக் கழகம்
ஆசியால் உயர்ந்துமே வாழி.

Rtn சதீஸ்பாலமுருகன்

லோகேஸ்வரன்

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

## இன்ரறக்ட் கழகம்



மண்மீட்புப் போரில் இன்னுயிர் நீத்த மாவீரர்களுக்கும்
பொதுமக்களுக்கும் அஞ்சலித்து நிற்கின்றது.

மடிகின்ற வீரர் புதைகின்ற மண்ணில்
விதையாக முளைக்கின்றார்
விடிகின்ற வானில் எழுகின்ற ஒளியாய்
தலைவன் இருக்கின்றார்.

# பொருளடக்கம்


ஆசிச்செய்திகள்

கவிதை 10

செயற்திட்ட அறிக்கை 12

றோட்டறியின் வழியில் இன்ரறக்ட் 13

போதைப் பொருளும் மனிதனுக்கு அவற்றால் ஏற்படும்தாக்கங்களும் 14

எயிட்ஸ் 17

அறிந்துகொள்ளுங்கள் 19

நாடகக் கலையின் பண்புகள் 21

இருதய நோய்கள் 23

நம்பிக்கை அலகுகள் 25

இன்றைய கல்விமுறைமை எமது எதிர்காலத்தின் தேவையைப் பூர்த்திசெய்யுமா ? 29

விஞ்ஞானமும் அதன் வளர்ச்சியும் 31

மலர்சிறக்க உதவிய கரங்கள் 33

புராதன இந்துக்களின் எண்ஞானம் 35

ஒழுக்கம் விழுப்பம் தரும் 39

# வாழ்த்துரை

எங்கள் பாடசாலையின் இன்ரறக்ட் கழகத்தினர் மகாஜன தீபம் என்ற சஞ்சிகையினை வெளியிட முன்வந்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். இத்தகைய சஞ்சிகைகள் வெளிவருவதனால் மாணவர்களின் ஊக்கம், திறமை, செயற்பாடு என்பன வெளிக்கொணரப்படுகின்றன இன்ரறக்ட் கழகத்தினர் கல்லூரிக்கு ஆற்றிவரும் பணி மகத்தானது. இன்ரறக்ட் கழக மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரி யாக நடந்து கல்லூரிக்குப் பெருமையைத் தேடித்தருகின்றார்கள். இந்த வகையில் அவர்கள் வெளியிடவிருக்கும் மகாஜன தீபம் என்ற சஞ்சிகை சிறப்புற அமைய என் நல்வாழ்த்துக்கள்

க. நாகராஜா
அதிபர்

## யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகத் தலைவரின்

# ஆசிச்செய்தி

முதலாவது இன்ரறக்ட் கழகம் அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் உள்ள எமல்போர்னில் நிறுவப்பட்டது இன்று உலகில் 93 நாடுகளில் 6 ஆயிரத்து 800க்கு அதிகமான இன்ரறக்ட் கழகங்கள் உள்ளன. ஒன்றரை லட்சம் வரை உறுப்பினர்கள் இக்கழகங்களில் உள்ளனர்.

சர்வதேச நலவெண்ணம் மற்றும் பாடசாலை அல்லது சமூகத்திற்கு சேவைசெய்ய தனது உறுப்பினர்களின் திறமைகளையும் சக்தியையும் பூரணமாகப் பயன்படுத்தி தீவிரமாகச் செயற்படும் இன்ரறக்ட் கழகமே வெற்றிப் பாதையில் செல்வதில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது.

இந்த வரிசையில் மகாஜனக் கல்லூரியின் இன்ரறக்ட் கழகம் "மகாஜனதீபம்" என்ற சஞ்சிகையை வெளியிட்டு இன்ரறக்ட் கழகத்தின் நோக்கத்தைப் பரப்ப முன்வந்துள்ளதை நான் பாராட்டுகின்றேன். இச் சஞ்சிகை இன்ரறக்ட் கழகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்று நம்புகின்றேன். இச் சஞ்சிகைக்கும் இதனை வெளியிடும் மகாஜனக் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தினருக்கும் எனது நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

Rtn ஈ. சரவணபவன
தலைவர்
றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம்.

# றோட்டரிக் கழக இளைஞர் சேவை இயக்குனரின்

# ஆசிச் செய்தி

எமது கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட இன்ரறக்ட் கழகங்களுள் துடிப்பாகச் செயற்படும் மகாஜனக் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் வெளியீடான 'மகாஜன தீபம்' எனும் செய்தி இதழுக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இடம்பெயர்ந்து பல இன்னல்களுக்கு மத்தியில் இயங்கும் இக் கல்லூரி மாணவர்களின் திடசித்தமும், தன்னம்பிக்கையும் இக் கழகத்தின் செயற்பாடுகள் மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

எமது கழகம் 1994 / 1995 ஆண்டிற்கு ஏற்பாடுசெய்திருந்த மாதாந்த இன்ரறக்ட் தலைவர்கள் சட்டத்தை உரியமுறையில் பயன்படுத்திய கழகங்களில் மகாஜனக் கல்லூரி இன்ரறக்ட் கழகமும் ஒன்றாகும்.

இக் கழகத்தின் செயல்பாடுகள் தாய்க்கழகத்திற்கு மன நிறைவைத் தருகின்றன.

தொடர்ந்து வரும் காலத்திலும் இக்கழகம் சிறப்புறச் சேவையாற்ற எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இந்த றொட்டறி வருடத்தில் இக் கழகத்தின் செயற்திட்டங்களுக்காக எனது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Rtn. Phsm. Dr. த. ஸ்ரீரட்ணகுமார்
இளைஞர் சேவை இயக்குனர்
யாழ் றொட்டறிக்கழகம்

## றோட்டறிக் கழக செயலாளரின்

# ஆசிச் செய்தி

மகாஜனக் கல்லூரி இன்ரறக்ட் கழகம் வெளியிடும் மகாஜன தீபம் இதழுக்கு ஆசிச்செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் எமது கழகத்தின் அனுசரணையுடன் இயங்கும் இருபது கழகங்களில் இக் கழகம் குறிப்பிடத்தக்க சாதனையைச் சென்ற ஆண்டு ஏற்படுத்தியது. தொடர்ந்து வரும் தலைவர் செல்வன் பிரகாசன் அவர்களும் அவரின் இயக்குனர் சபை உறுப்பினர்களும் இக் கழகத்தின் சீரியசமுதாயப் பணிகளுக்கு காரணமானவர்கள் எனலாம். ஒவ்வொரு மாணவர்களினதும் தலைமைத்துவப் பண்பை வெளிக்கொணர்ந்து எதிர்காலச் சவால்களுக்குமுகங் கொடுக்கக்கூடிய ஒரு மனிதனாக அவர்களை மாற்றுவதே இன்ரறக்ரின் இலக்கு.

கழக உறுப்பினர்கள் சுய ஆக்கத்திறன் மிக்கவர்களாக விளங்குவதில் கழகத்தை முதன்மைப்படுத்தும் தொழில் முகாமைத்துவத்தைப் புரிந்துகொள்ளும் ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் இன்ரறக்ரின் பங்கு முக்கியம் ஆனது.

சமூகத்தின் தேவைகளை கண்டு அறிந்து அதற்கு தீர்வு காண்பதில் இன்ரறக்ட் கழகம் முயற்சிக்க வேண்டும் இந்த நம்பிக்கைக்கு உரியவராக தலைவர் பிரகாசன் விளங்குகிறார். உங்கள் கழகம் பணி சிறக்க கழகத்தின் செய்தி இதழ் மகாஜன தீபம் தொடர்ந்து வெளிவர எமது கழகத்தின் வாழ்த்துரைகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Rtn. த. திருநந்தகுமார்
செயலாளர்

றோட்டறிக் கழகம்,
யாழ்ப்பாணம்.

# மனித நேயத்தை நோக்கி

''துன்பம் உறவானினும் செய்க துணிவு ஆற்றி

இன்பம் பயக்கும் வினை'' என்பது செந்தமிழ்ப் புலவன் வள்ளுவன் தந்த வாக்கு. இதன் பொருள் உலகிற்கு நன்மை பயக்கும் செயலினை மனந்தளராமல் துணிவுடன் செய்வாய்'' என்பதாகும், இப்பொருளுக்கமைய பாடசாலைக் கல்விக்கு அப்பால் சமூக சேவை என்னும் கல்வியிலே நன்கு சிறப்பாற்றிவரும் எமது இன்றரக் கழகம் ஐந்தாண்டுகளைப் பூர்த்திசெய்வதில் பெருமையடைகின்றேன். பாடசாலை மட்டம், சமூகமட்டம், தேசியமட்டம், உலகமட்டம் என சேவையாற்றும் றோட்டரிக் கழகத்தின் கிளையாயே எமது கழகமும் பலப்பல மட்டங்களில் செய்த பங்களிப்புக்கள் போற்றுதற்குரியன உலகத்தின் சமூகங்களுக்கிடையே நல்ல மனித நேயத்தை வளர்ப்பதிலும், எமது சமூகத்தின் தனிமனித வளர்ச்சிக்கு துணைநிற்பதிலும் மேலும் மேலும் எமது கழகம் வளரவேண்டும் எனவும், ஆல்போல் தழைத்து மகாஜனாவின் புகழ்பரப்பி உலகமெல்லாம் மிளிரச்செய்வேண்டுமெனவும், இவ் விழா மலர் வெளியீட்டை ஒட்டி பெருமை அடைவதுடன் ''ஒழுக்கம், கடமை கண்ணியம் பேணி'' கழகம் வளர்ந்து செழிக்கவும் எனது மனமுவந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

''சேவையே பேரின்பம்''

இ. மோகனதாஸ்
ஆசிரிய ஆலோசகர்

யா / மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.

# கழகம் சிறக்க. . . .

சர்வதேசரீதியில் பல்வேறு சேவைகளையாற்றிவரும் கழகங்களில் முக்கியமானது றோட்டறிக் கழகம். இதன் சேய்கழகங்கள் இரண்டு வகைப்படும் அவையாவன :

1) றோட்டரக்ட் கழகம்
2) இன்ரறக்ட் கழகம் என்பனவாகும்.

றோட்டரக்ட் கழகங்களில் 18 முதல் 30 வயதுவரையான இளைஞர்கள் யுவதிகள் அங்கம் வகிக்கின்றனர். இன்ரறக்ட் கழகங்களில் 14 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். தன்னலமற்ற சேவை என்பதை குறிக்கோளாகக் கொண்டு பாடசாலைக்கும் கழகத்திற்கும் இக் கழகங்கள் சேவையாற்றி வருகின்றன. இத்தகைய இன்ரறக்ட் கழகம் கொண்ட பாடசாலையாக எமது கல்லூரியும் மிளிர்கின்றது. எமது இன்ரறக்ட் கழகம் இப்போது ஐந்து அகவைகளைத் தாண்டி நிற்கின்றது. எமது பாடசாலை தெல்லிப்பழையில் இருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் இயங்கி இப்போது மருதனார்மடத்தில் இயங்கி வருகின்றது. இத்தகைய சூழ்நிலையிலும் எமது கழகம் எமது சமூகத்திற்கும் பாடசாலைகளிற்கும் தன்னாலான சேவைகளைச் செய்துவருகின்றது. எமது தாய்க்கழகமாகிய யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆசியுடன் எமது கழகம் பல்வேறு செயற்திட்டங்களை பாடசாலை மட்டத்திலும் கழகத்திற்கும் ஆற்றிவருகின்றது. சேவைசெய்வதே மேலான இன்பம் என்பதை உணர்ந்து தன்னலமற்று இனிது உழைக்கின்ற வழிகாட்டி நிற்கும் எமது இன்ரறக்ட் கழகம் மேன்மேலும் வளர்ந்து பண்பு ஒளியினைப் பரப்பி பயன்கள் பலவற்றையும் செய்திட எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஆனந்தநடராஜப்பெருமானின் அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

மு. சதீஷ்பாலமுருகன்
1993 / 1994 ன் தலைவர்
மகாஜனக் கல்லூரி, இன்ரறக்ட் கழகம்.

## கழகத் தலைவர் உள்ளத்தில் இருந்து. . .

இன்றைய காலகட்டத்தில் யாழ் மாவட்ட இன்ரறக்ட் கழகங்கள் திறம்பட செயற்பட முடியாத தன்மையில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன. ஆனாலும் இடைவிடாத முயற்சியால் ஓரளவிற்கு தலைநிமிர்ந்து நிற்க முடிகின்றது. இந்தவகையில் எமது கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தினராகிய நாமும் பல சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். தலைவர் என்ற வகையில் எனக்கு சக அங்கத்தினர் தரும் பேராதரவு பாராட்டுக்குரியது.

தொடர்ச்சியான இடைவிடாத செயற்பாட்டினால் எமது கழகம் இம் மலரை வெளியிடுவதில் பெருமைப்படுகின்றது. எமது கல்லூரி இடம்பெயர்ந்த நிலையிலும் மாணவர்களின் தளராத உறுதி இவ் வெளியீட்டின் மூலம் எல்லோர்க்கும் தெளிவாக புரிந்திருக்கும். 1990 களின் பின்னர் புத்துயிர் ஊட்டப்பட்ட எங்களின் கழகம் இப்போது முதற்தடவையாக அறிவியல்சார்ந்த இம்மலரை ஆக்கியதிலிருந்து 1995 இல் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது.

எமது காலத்தில் பல தலைமைத்துவப் பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும் எம் கழகம் பெற்றுக்கொண்டதோடு பல இடங்களிலும் அங்கத்தினர் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டனர். அந்தவகையில் இம்மலருக்கு பேராதரவு நல்கி கழகம் மேலும் வளர்ச்சியடைய எல்லோருடைய ஒத்துழைப்பினையும் எதிர்பார்க்கின்றேன்.

Int. த. பிரகாசன்
தலைவர்

## புகழொளி சுடரப் பொலிவுறுக

நற்பணி புரிதலால் நாடொறும் உவப்ப,
கற்றலொடு சமுதாய நலன்காக்கும் பணியில்
நிற்றலே மேலென்ற உயர்வான கொள்கையில்
பற்றுடனே பணிபுரியும் பாங்குடைய தோர்அமைப்பு.

கல்லூரி மாணவர்க்கு உயர்ந்ததோர் பாதை
பல்வழியும் நாடடாற் பரிதவிக்கும் மாந்தர்தம்
அல்லல்பல நீக்கும் அரியதோர் அமைப்பது
சொல்வதும், புரிவதும் இணையிலாச் சேவை.

பிணியாளர், வறுமையின் பிடிவாழுவோரும்,
தணியாத வன்முறையாற் புயம் பெயர்ந்தோரும்
பணியாலே பயனுற்று வளம் கண்டுவப்பர்.
துணிவான சேவையாற் துலங்கிடச் சிறப்பர்.

''இன்ரறக்ட்'' என்கின்ற இனியதொரு பெயரில்
நன்மணங் கொண்டோர் சேவை, வள உணர்தன்னில்
இன்முகங் கொண்டுலகினிலே உலவுகிற வெள்ளி
நின்றிலங்கப் புகழினிலே வாழ்த்துரைப்போம் அள்ளி.

Int கவிதா
96 கலைப்பிரிவு


மகாஜன தீப மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள் !

தரமான மருந்துவகைகளை மலிவு விலையில் பெற
நாட வேண்டிய இடம்

# சிந்து மருந்தகம்

116 காங்கேசன்றை வீதி, சுன்னாகம்.

எமது வழிகாட்டிகள் . . .

# மகாஜனக் கல்லூரி இன்ரறக்ட் கழகம்

## நிர்வாகக் குழு உறுப்பினர்கள் (1993/1994)

| | |
|---|---|
| காப்பாளர் : | திரு. க. நாகராஜா |
| ஆசிரிய ஆலோசகர் : | திரு. இ. ஜெயமனோகரர் |
| | திரு. இ. மோகனதாஸ் |
| | செல்வி சா. தம்பிராஜா |
| தலைவர் : | Int. மு. சதீஸ்பாலகுமார் |
| உப தலைவர் : | Int. த. ஆரணி |
| செயலாளர் : | Int. இ. றோகிதன் |
| உப செயலாளர் : | Int. க. மயூரன் |
| பொருளாளர் : | Int. பூ. மோகனதாஸ் |
| **இயக்குனர்கள் :** | |
| கழக சேவை : | Int. மு. கிரிதரன் |
| சமூக சேவை : | Int. கு. சுந்தரவடிவேல் |
| சர்வதேச புரிந்துணர்வு : | Int. வை. லதா |
| நிதி நிர்வாகம் : | Int. ச. சேரன் |
| பத்திராதிபர் : | Int. க. தர்சினி |
| கழகக் காவலர் : | Int. த. பிரகாசன் |
| றோட்டறி ஆலோசகர் | Rtn. மா. சின்னத்தம்பி |

## நிர்வாகக் குழு 94 / 95

| | |
|---|---|
| காப்பாளர் : | திரு. க. நாகராஜா |
| ஆசிரிய ஆலோசகர் : | திரு. இ. மோகனதாஸ் |
| றோட்டறி ஆலோசகர் : | Rtn. ச. பாஸ்கரன் |
| தலைவர் : | Int. த. பிரகாசன் |
| உப தலைவர் : | Int. க. தர்சினி |
| செயலாளர் : | Int. மு. கிரிதரன் |
| உப செயலாளர் ; | Int. வ. லதா |
| பொருளாளர் : | Int. ந. வைகுந்தன் |
| **இயக்குனர்கள் :** | |
| கழக சேவைகள் : | Int. இ இரகுராமன் |
| நிதி : | Int. வே. செவ்வேள் குமரன் |
| சர்வதேச புரிந்துணர்வு : | Int. ம. லதாங்கி |
| சமூக சேவை : | Int. ஏ. பகிரதன் |
| பத்திராதிபர் : | Int. ச. கலைவாணி |
| | Int. செ. அனித்தா |
| | Int. சு. தீபன் |
| காவலர் : | Int. வ. முகுந்தன் |

# செயற் திட்ட அறிக்கை

## 1994 / 1995

1) மருதனார்மடம் உடுவில் வீதியில் பாடசாலை முன்றலில் வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபடுதல். [01 - 06 - 1995]

மேற்படி நடவடிக்கை மாணவ தலைவர்கள் அல்லாத இன்ரறக்டர்களால் செயற்படுத்தப்படுகிறது. கழகச் சேவை இயக்குனர்களின் தலைமையில் இவ் வீதி ஒழுங்கானது காலை 7.45 மணிக்கு ஆரம்பித்து 8.15 மணிக்கு நிறைவு செய்யப்படுகிறது. மாலை 2.10 மணிக்கு ஆரம்பமாகி பாடசாலை மாணவர்கள் சென்றடையும் வரை நடைபெறுகிறது.

2) பாடசாலை வகுப்பறைகளுக்கு முன்பாக பூந்தோட்டமமைத்தல்

இச் செயற்பாடானது 18 – 06 – 94 அன்றும் 06 – 07 – 94 அன்றும் நடைபெற்றது. இச் செயற்பாட்டில் பல அங்கத்தவர்கள் பங்குபற்றினர். இச் செயற்பாடானது ஆசிரிய ஆலோசகரது நிர்வாகக் குழு தலைமையில் நடைபெற்றது.

3) நிதர்சனம் நிறுவனத்திற்கு படக்காட்சி அனுமதிச்சீட்டு விற்றுக் கொடுத்தமை.

இச் செயற்பாடானது யூலையில் நடைபெற்றது. இச் செயற்பாட்டை மேற்கொண்டதற்காக நிதர்சனத்தால் 1625/– கழகப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. படக்காட்சி அனுமதிச் சீட்டு மொத்தமாக 4625/– விற்கப்பட்டது.

4) ஜெய்ப்பூர் செயற்கைக்கால் கொடிதினத்திற்கு ரிக்கற் விற்றுக் கொடுத்தமை.

இச் செயற்பாடானது 94-ம் ஆண்டு யூலையில் இடம்பெற்றது.

5) பொது அறிவுப் போட்டி நடத்தியமை.

இச் செயற்பாடானது 07 – 10 – 94 அன்று கல்லூரி மாணவர்களிடையே வைக்கப்பட்டது. இப் பொது அறிவுப் போட்டியில் ஆண்டு 6 முதல் ஆண்டு 13 வரை இடம்பெற்றது இச் செயற்படானது கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு மேற்பிரிவு, என மூன்று ஆக வகைப்படுத்தப்பட்டு நடாத்தப்பட்டது

6) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கழக மாநாட்டிற்கு 75 அங்கத்தவரை அனுப்பிவைத்தமை

7) மாணவர் சுத்தமான நீரைப்பெற......

கல்லூரி மாணவர் தம் தேவைக்காகப் பயன்படுத்தும் கல்லூரி வளவிலுள்ள கிணற்று நீரை தவணைதோறும் குளோரின் இட்டு தூய்மைப்படுத்தியமை.

8) பாடசாலைத் தளபாடங்களுக்கு இலக்கங்கள் பொறித்தமை.

9) றோட்டறிக் கழகத்திற்கு நூறு புத்தகங்கள் சேர்த்துக்கொடுத்தமை.

Int. மு. ஸ்ரீதரன்
செயலாளர் (1994 / 1995)

## மகாஜன தீபத்தின் சேவை நிலைக்க எமது வாழ்த்துக்கள் !

உலகின் ஜீவ நதியாம் நைல் நதி யாழ் நகரின் மத்தியில்
ஊற்றெடுக்கும் அருவியாம் குளிரருவி,

உங்களின் நாவின் சுவைக்கும் நறுமணத்திற்கும், நல்ல தரத்திற்கும்
உடலும் உள்ளமும் புளகாங்கிதக் கடலில் மிதந்து செல்ல

எம்மிடம்

ஒரே கிண்ணத்தில் மூவர்ண கிறீம் குமிழ்கள், பழ அமிர்தம்,
ஜெலி நட்ஸ், கொக்கோ, பனான, வனிலா, அமெரிக்கன்
ஐஸ் கிறீம், சோடா பேயஸ் கொண்ட விசேட ஐஸ் கிறீம்

- சுத்தமான பசும்பாலில் தயாரிக்கப்பட்ட யோக்கட்
- பிறந்தநாள், திருமண கேக் வகைகள்
- அறுவகை சிற்றுண்டி வகைகள்
- சொக்கலேற் வகைகள்
- குளிர்பானங்கள்
- பழரின்கள்

மற்றும் உங்கள் விசேட தினங்களுக்கு உடன்
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இவற்றுடன்

களைத்து, அலைந்து, புசிக்க மனம் கவரும்: மணம் கமழும் பாய்ச்சிட
மெல்லக் காற்று தவழ்ந்து வரும் சிற்றறைகள் கொண்டு
தனியாக தாகத்தை தணிய வைக்கும் யாழ்நகரின் மத்தியில்

# குளிரருவி

இராசன் சாலை, யாழ்ப்பாணம்.

# மகாஜனக் கல்லூரி இன்ரறக்ட் கழகம்

## நிர்வாகக் குழு 94 | 95

| | |
|---|---|
| காப்பாளர் : | திரு. க. நாகராஜா |
| ஆசிரிய ஆலோசகர் : | திரு. இ. மோகனதாஸ் |
| றோட்டறி ஆலோசகர் : | Rtn ச. பாஸ்கரன் |
| தலைவர் | Int த. பிரகாசன் |
| உப தலைவர் : | Int க. தர்சினி |
| செயலாளர் : | Int மு. கிரிதரன் |
| உப செயலாளர் : | Int வ. லதா |
| பொருளாளர் | Int ந. வைகுந்தன் |

**இயக்குனர்கள் :**

| | |
|---|---|
| கழக சேவை : | Int இ. இரகுராமன் |
| நீதி : | Int வே. செவ்வேட்குமரன் |
| சர்வதேச புரிந்துணர்வு : | Int ம. லதாங்கி |
| சமூகசேவை : | Int ஏ பகீதரன் |
| பத்திராதிபர் : | Int ச. கலைவாணி |
| | Int செ. அனித்தா |
| | Int க. தீபன் |
| காவலர் | Int வ. முகுந்தன் |

# நிர்வாகக்குழு 1994 - 1995



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)

திரு. இ.மோகனதாஸ் (ஆசிரிய ஆலோசகர்), Int. மு. கிரிதரன் (செயலாளர்), திரு. பொ.சுந்தரலிங்கம் (உப அதிபர்)
Int. த. பிரகாசன் (தலைவர்), திரு. க. நாகராஜா (அதிபர்), திரு. செ. இராஜகுலேந்திரன் (உப அதிபர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)

Int.க. தர்சினி, Int.ம. லதாங்கி, Int.ஏ. பகீதரன், Int.இ. இரகுராமன், Int.வ. முகுந்தன், Int.ந. வைகுந்தன் (பொருளாளர்)
Int.வே. செவ்வேல்குமரன், Int.சு. தீபன், Int.வ. லதா, Int.ச. கலைவாணி, Int.செ. அனிக்கா

# றோட்டறியின் வழியில் இன்ரறக்ட்

இன்று பல்வேறு அமைப்புக்கள் சேவை மானப்பான்மையோடு பணியாற்றுகின்றன அவற்றுள் முன்னோடியாக 20 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது றோட்டறி அமைப்பாகும். ஆரம்பகட்டத்தில் இவ் அமைப்பின் உரையாடல்கள் இடத்துக்கு இடம் மாறி நடத்தப்பட்டமையாலேயே றோட்டறி என பெயர் பெற்றது. இது 1905-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பல உறுப்பினர்களை உள்ளடக்கியதே றோட்டறிக்கழகமாகும்.

உலகளாவிய ரீதியில் மேற்படி கழகங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்த அமைப்பே சர்வதேச றோட்டறியாகும். (Rotary International) இதன் தலைமையகம் அமெரிக்காவில் உள்ள இல்லினோய் மாநிலத்தில் இலன்ஸ்ரோண் நகரில் உள்ளது. இக் கழகத்தின் பிரதான குறிக்கோள் வாசகம் " தனலமற்ற சேவை " (Service Adoveself) என்பதாகும்

- ★ மனிதாபிமான சேவை வழங்கல்
- ★ தொழில் துறைகளில் உயர்ந்த நெறி பேணல்
- ★ உலகில் சமாதானமும் நல்லெண்ணமும் வளர்தல்.

என்பவற்றை வளர்க்கின்ற வணிக மற்றும் தொழில் துறையினரை ஒன்று சேர்த்தலே இதன் நோக்கமாகும். இது சேவையில் விருப்பமுள்ள அனைவரையும் ஒன்றிணைக்கின்றது. பல்வேறு கருத்து முரண்பாடுகள் இருப்பினும் சேவை மனப்பான்மையில் தோழமை உணர்வோடு செயற்படுகின்றார்கள். இதன் அங்கமாக றோட்டறி நிதியம் (Rotary Foundation) அமைக்கப்பட்டு உள்ளது. றோட்டறியன்களால் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு புலமைப் பரிசில்கள், குழுநிலைக் கல்விப்பரிவர்த்தனைகள், சுகாதார மனித அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியன நிறைவேற்றப்படுகின்றன.

உலகில் போலியோ என்னும் நோயை 2005 ஆம் ஆண்டளவில் முற்றாக நீக்க உறுதி பூண்டு செயற்படுகிறது. இளமையிலே சேவை மனப்பான்மை, சர்வதேச புரிந்துணர்வு ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்தோடு இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதோடு அவர்களது தனிப்பட்ட ஆளுமை அறிவு திறனை உயர்த்துவதற்கான நோக்கிலும் றோட்டறியின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டதே இன்ரறக்ட், றோட்டறக்ட் கழகங்களாகும். 14 — 18 வயதிற்கு இடைப்பட்டோர் இதன் உறுப்பினர் ஆகலாம். International Action என்பதே Interact எனக் குறுகிப் பெயர் பெற்றது இக் கழகம் ஆகும்.

பழமை, புதுமை, முதுமை, இளமை, இணைப்புக்கள் வலுவுடைய இக் கழகங்கள் உதவுகின்றன. பெரியோர்களால் போற்றப்படுவதுடன் புதிய இன்ரறக்ட், றோட்டறக்ட் சமுதாயம் உருவாகின்றது. 1962 இல் அமெரிக்காவில் மெல்போர்ன் நகரின் முதலாவது இன்ரறக்ட் கழகம் உருவாக்கப்பட்டது. தற்போது உலகில் உள்ள 93 நாடுகளில் 7,000 இற்கு மேற்பட்ட கழகங்களில் 15,000 மேற்பட்ட உறுப்பினரைக்கொண்டு செழிப்பான அமைப்பாக வளர்ந்துள்ளது. பாடசாலைகளில் அல்லது சமுகங்களில் உள்ளோரைக்கொண்ட இக் கழகங்களின் திட்டங்களும், செயற்பாடுகளும் அங்கத்தவர்களினாலேயே உருவாக்கப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட கழக உத்தியோகத்தர்களின் வழிகாட்டலில் நிறைவேற்றப்படுகிறது.

இவற்றின் மூலமாக அங்கவீனமுற்ற சிறுவர் வயோதிபர் போன்ற பலர் பயன் பெறுகின்றனர். இன்ரறக்ட் கழகங்கள் போன்று றோட்டறிக் கழகங்களும் செயலாற்றுகின்றன. புதிய நண்பர்களை அங்கத்தவர்களாக்குதல் புதிய நோக்கங்கள் நிறைவேற்றல் என்பன இன்ரறக் கழகங்களில் அடையக்கூடிய பயன்களாகும் இங்கு இனம், சமயம், மொழி, நட்புறவு என்பவற்கு ஒரு தடையும் இல்லை என்பது இன்ரறக் கழக மூலம் வெளிக்காட்டக் கூடியதாக உள்ளது. றோட்டறக்ட் கழகத்தின் சேய்க் கழகமாக இன்ரறக்ட் கழகம் செயலாற்றி வருகின்றது.

Int ந. வைகுந்தன்
[பொருளாளர்]

# போதைப் பொருள்களும் மனிதனுக்கு அவற்றால் ஏற்படும் தாக்கங்களும்

போதைப் பொருள் பாவனை இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பல ஒரு பிரச்சனையாகும். இதை எப்போதுமே சமயங்களும், நன்கறிந்த அறிஞர் பெருமக்களும் எதிர்த்து வந்துள்ளனர். நாம் ஒவ்வொருவரும் ஆத்மீக நெறியில் ஒழுகி எமக்கு எமது சமயம் கூறும் அரிய கருத்துக்களை ஆழமாக சிந்தித்து அதன்படி நடந்தால் இப் போதைப் பொருள் பிரச்சனையில் இருந்து இலகுவாக விடுபடலாம். போதைப் பொருள், அவற்றால் ஏற்படும் இழப்புக்களை அறிந்திருத்தலால் மட்டுமோ அல்லாது அவை பற்றி பிரச்சாரம் செய்வதால் மட்டுமோ இதை எமது சமூகத்தில் இருந்து ஒழித்து விட முடியாது.

இந்து, கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் மது அருந்தலை மனிதன் செய்யும் பாவச் செயல்களில் ஒன்றாக எடுத்துக் காட்டுகின்றன. மற்றும் திருக்குற்றால புராணம், மணிமேகலை, போன்ற நூல்களிலும் இதற்கு எதிரான கூற்றுக்கள் கூறப்பட்டுள்ளன.

இனி போதைவஸ்து என்றால் என்ன என்பது பற்றியும் அதிலுள்ள வேறுபாடு பற்றியும் அதை துஷ்பிரயோகம் செய்தால் மனிதனுக்கு ஏற்படும் தீமைகள் பற்றியும் நோக்குவோம்.

போதைவஸ்து என்றாலென்ன? போதைவஸ்து என்பது மனிதனால் உட்கொள்ளப்படும் போது அவனது உடலில், மனதில் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வல்ல இரசாயனப் பொருளாகும். மருந்துகளின் துர்பாவனையென்பது சட்ட விரோதமாக அல்லது சட்ட பூர்வமாக ஏதாவது இரசாயனப் பொருள்களை பாவித்தலால் ஏற்படுகின்ற விளைவானது தனிநபரில் உடல் ரீதியாக, உளரீதியாக, உணவுரீதியாக, அல்லது சமூகரீதியான, சீரழிவை ஏற்படுத்துகின்றது. இது பின்வருவனவற்றுள் ஏதாவதொன்றினை பின்பற்றுவதனால் ஏற்படலாம். ஒருவருடைய நடத்தைப் போக்கையும் மனோநிலையும் மாற்றியமைக்கக் கூடிய வலிமையுடைய மருந்துகள் பிரயோசனமுடையவையாக இருந்தாலும் அவை பிரயோசனப்படாத சந்தப்பத்திலும் அவற்றை உபயோகித்தல்.

எந்த நோக்கிற்காக மருந்துப் பொருள்கள் பிரேரிக்கப்பட்டதோ அந்நோக்கத்திற்கு அல்லது வேறுநோக்கத்திற்கு அவற்றைப் பாவித்தல். சட்டபூர்வமாக மருத்துவ நோக்கிற்கு பிரயோகிக்கமுடியாத ஆனால் ஆராய்ச்சியில் வைக்கப்பட்டுள்ள மருந்துப் பொருள்களைப் பாவித்தல்.

பொதுவாக துர்பாவனைக்குள்ளாகும் மருந்து வகைகள், அவை உடலில் ஏற்படும் பாதிப்புக்களை பொறுத்து பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

sedatives : இவை பதட்டம், பதகழிப்பு, திகைப்பு என்பவற்றை குறைக்கும்

Eg : Bariturates, Nonbabiturates, Tranq
-uilizers, Alcohol

2. Stimulants : இவை உசார்த்தன்மை, உடல் விருப்பங்களை கூட்டும்.

Eg : Amphetamines, Cocaine, Caffeine

3. Hallucinogens : உணர்ச்சி உணர்வுகள் சிந்தனை, சுய விழிப்புத்தன்மை என்பவற்றை பாதிக்கும் நேரம், இடம் ஆகியன தொடர்பான மாற்றம், போலி நம்பிக்கைகள், மாயைத் தோற்றங்கள் என்பன ஏற்படும்.

Eg : LSD, Mescalinemarijauana

4. Narcotics: இவை வலியை போக்குவதுடன் நித்திரையை தூண்டக்கூடியவை

Eg: Opium அதனுடைய மாற்றுப் பொருள் Morphine, Codeine, Heroine Methadone Pethidine.

மேற்கூறப்பட்டவற்றை விட சாதாரணமாக மக்களால் பாவிக்கப்படுகின்ற புகையிலையில் Nicotine என்னும் நச்சுப்பொருளும் வெற்றிலையுடன் சேர்க்கப்படும் பாக்கில் Arecoline என்னும் போதை பொருள் அடங்கியுள்ளது.

மதுபனத்தில் Alcohol என்னும் இரசாயனப் பொருளே போதையேற்படுத்துகின்றது இவ் Alcohol Sprit இலேயே(80%) கூடுதலாகக் காணப்படுகின்றது ஒரு சிகரெட்டில் காணப்படுகின்ற 20 Mg Nicotine இல் 10% உடலினுள் செல்கின்றது அத்துடன் காபன் மொனொக்சைட் உட்செல்கின்றது உடலினுள் Tar படிவதால் புற்றுநோய் ஏற்படலாம். சாதாரணமாக சிகரெட்டிற்கு அடிமையாக ஒரிவருக்கு 40 —100 வருடங்களும், ஹெரோயினிற்கு அடிமையாக இரண்டு அலலது மூன்று முறை பாவித்ததும், மதுபானத்திற்கு அடிமையாக 10 — 20 வருடங்களும தேவைப்படலாம்.

போதைப்பொருளை ஆரம்பத்தில் பாவிக்கும போது

தூண்டும் → பதட்டத்தை குறைக்கும் → நோவலி நீங்கும் → இன்பமாக இருக்கும் → இயக்கம் குறைதல் → மந்தமாதல் → பிதற்றல் → மயக்கம் → ஆழ்ந்த தூக்கம் (Coma) → இறப்பு.

தனது சகபாடிகள் பாவிப்பதாலும், வயது வந்தோரைப் பார்த்தும், தாய்தகப்பனின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி நிற்பதற்கும், உணர்ச்சிபூர்வ பிரச்சனைக்கு முகம் கொடுக்க முடியாமலிருப்பதாலும் சில இளைஞர் இப்போதைப்பொருளை நாடுகின்றனா.

விபத்து, இழப்பு, உளவியல், கோளாறுகள், எயிட்ஸ் போன்ற பாரிய நோய்கள் என்பன இப்போதைப் பொருளால் ஏற்படுகின்ற பிரச்சனைகளாகும்.

போதைப் பொருள் பாவித்த ஒருவரில் உடல், மனத்தளர்ச்சி, நித்திரையின்மை, பசியதிகரித்தல், நடை ஒழுங்கற்றுப் போதல், போலிக் கற்பனை பேச்சு தடுமாறல் போன்ற குணங்குறிகள் காணப்படும்.

## போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை முறை

1. வைத்திய மேற்பார்வையின் கீழ் அவரை படிப்படியாக நச்சுநிலையில் இருந்து குறைத்தல்.
2. உள ஆற்றுப்படுத்தல்.
3. புனர்வாழ்வு அளித்தல்.
4. இவற்றைக் கட்டுப்படுத்த புதிய மருந்துகளை பாவித்தல்.
5. சமூகத்தில் இவருக்குரிய இடம் வழங்கல்

## போதைவஸ்து பாவனைக்கான தடுப்பு நடவடிக்கை

1. ஆபத்து நிலையில் உள்ளவருக்கு போதைவஸ்து தொடர்பான சுகநிலை கல்வி அறிவூட்டல்.
2. பாதிக்கப்பட்டவருக்கு உணர்ச்சி பூர்வமான ஆதரவை குடும்பத்தவர், நண்பர் சமூகம் வழங்கல்.
3. பாதிக்கப்படக்கூடிய இலக்கினரை அவதானித்தல், விளையாட்டு, சமய, நாடக நாட்டியப் போட்டிகள் என்பவற்றில் ஈடுபடச்செய்தல்.

ஒரு சமூகத்தில்போதைவஸ்துப் பாவனையால் சீரழிபவர்கள் பெரும்பாலும் இளம் வயதினரே இவாகள் பாதிக்கப்படுவதால் சிறிது காலத்தில் நாட்டின் பொருளாதாரம் சந்ததி, கலாச்சாரம், பண்பாடு, உழைப்பு, கல்வி, தேக ஆரோக்கியம் போன்ற சகல துறைகளும் முடங்கிப்போக ஏதுவாக அமைகின்றது. ஆகவே இளைஞர் சமுதாயம் அறிவின் வழி நின்றும், சமய வாழ்க்கை அடிப்படையிலும் நின்று ஒழுகுமாயின் எமது நாடும், வருங்கால சந்ததியினதும் சுபீட்சமான நல்வாழ்வு வாழ்வர் என்பதில் ஐயமில்லை.

Int. க. வாசுகி
95 Maths

மகாஜன தீபம் மலர் சிறக்க

வாழ்த்துக்கள்!

## கணேசா நகையகம்

194, சந்தோசம் தெரு (கஸ்தூரியார் வீதி),

யாழ்ப்பாணம்

---

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

நவநாகரீகம் பட்டுப் பருத்தி பிடைவைகளின்

தெரிவிற்கு சிறந்த ஸ்தாபனம்.

## ஹாலிம் ஆடையகம்

54, பெரியகடை யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23377

---

மகாஜன தீப மலரே! நீ என்றென்றும்

வாழ்ந்திடுவாய்!

அசல் 22 கரட் நகைகளுக்கு

பிரசித்திபெற்ற ஸ்தாபனம்

## மஹாலக்ஷ்மி ஜுவல்லரி மார்ட்

213 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

மகாஜன தீப மலரே நீ பல்லாண்டு வாழ்ந்திடுவாய்!

தரம் மிக்க பாடசாலை பொருட்களுக்கு

நாடவேண்டிய இடம்

## தனலக்சுமி புத்தகசாலை

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# எயிட்ஸ் (AIDS)

எயிட்ஸ் என்ற கொடிய நோய் பரவத் தொடங்கிவிட்டதை மனிதன் உணர்ந்து 13 வருடங்களிற்கு மேலாகிவிட்டது. ஆனாலும் இன்றுவரைக்கும் அதனை முழுமையாக குணப்படுத்தக்கூடிய மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை

இந் நோயை ஏற்படுத்துவது HIV என்ற வைரஸ் ஆகும். HIV என்பது Human Immuno deficiency Virus ஆகும். HIV மனித உடலை விட்டு வெளியே வந்தால் இரத்தம் உலரும் கணத்திலேயே அதுவும் இறந்து விடும். அத்தனை மென்மையானது. HIV விரும்பித் தங்குமிடங்கள் மனித இரத்தம் விந்துகளாகும். இதிலும் பலவகைகள் காணப் படும். HIV Type III. எயிட்ஸ் ஓர் ஒட்டி வாரொட்டி நோயல்ல ஆம் எயிட்ஸ் நிச்சயம் தொட்டாலே ஒட்டிக் கொள்கின்ற அளவுற்கு Contagious நோயல்ல. ஆனால் இது ஒரு வகை தொற்றுநோய் (Infectlous Disease) அதாவது கிருமி குடிகொண்டிருக்கும் இரத் தம விந்து போன்ற ஒருவரது உடலினுள் செலுத்தப்பட்டால் அவரை HIV பாதிக்கத் தொடங்கிவிடும்.

நாம் உல்லாசமாக உறங்கிக்கொண்டி ருக்கும் அதே சமயத்தில் பிரமிப்பு ஊட்டும் யுத்தத்தில் எமது உடம்பு ஈடுபட்டுக்கொண் டிருக்கிறது அந்தளவிற்குச் சத்தமின்றி நமக்குள்ளே நடக்கும் இந்த வியப்பூட்டும் போரில் உயிர வாழும் ஒவ்வொரு வினா டியும் நம்மை அறியாமலேயே நாம் ஈடுபட் டுக்கொண்டு இருக்கிறோம் அதுதான் நாம் உயிர் வாழ நாம் நடத்தும் போர்.

மனிதனைச் சூழ்ந்து இருக்கும் கண்ணுக்கே தெரியாத பலதரப்பட்ட கணக்கில் அடங் காத கிருமிகள்தான் மனிதனின் முதல் எதிரி. இவை உடம்பில் சிசுக்களுக்குள்ளும் மனித உறுப்புக்களுக்குள்ளும் புகுந்து ஆக்கிரமித்து மனிதனை கொல்ல பல்லாயிரக் கணக்கான கிருமிகள் காத்துக் கொண்டிருக்கின்றன. இவற்றில் இருந்து மனிதனை பாதுகாப்பது

நீர்ப்பீடத் தொகுதி Immune System என்று சொல்லப்படும். அவனுடைய உடம்பின் தற்காப்புப்படை ஆனால் இந்தப் பாதுகாப்பு படையை முழுமையாகக் கட்டுப்படுத்துவது உடலில் உள்ள D4 அணுக்களாகும். ஆனால் HIV வைரஸ் ஆனது பாதுகாப்புப் படையை மாற்றி வீட்டு நேரடியாக D4 அணுக் களையே தாக்குகின்றது. அதாவது HIV ஆனது தனது RNA என்கிற உட்கருவின் D4 அணுவின் DNA என்கிற உட்கருவினுள் செலுத்தி தன்னைப்போலவே பல RNAகளை உருவாக்க கட்டளை இடுகிறது. இதனால் பாதுகாப்புப் படைக்கு பொறுப்பாகவுள்ள D4 இல இருந்தே பல குட்டி HIVகள் கணக் கின்றி வெளிப்படுகின்றன. இவ்வாறு தோன்றிய HIV வைரஸ்கள் மற்றைய D4 அணுக்களையும் அழிக்கத்தொடங்குகின்றன. இதனால் எமது உடலில் நோய்கள் ஏற்ப டாது பாதுகாத்து வந்த D4 அணுக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடை கின்றது. இதனால் மனிதனைக் கொல்லக் கூடிய நோய்கள் மனிதனுக்கு இலகுவாகத் தொற்றுகின்றன.

HIV கிருமி உள்ள ஒருவருக்கு எயிட்ஸ் இருக்கிறது என்று சொல்வது தவறு. HIV உடம்பிற்குள் புகுந்து பல வருடங்களுக் குப் பின்னர் ஏற்படும் இறுதிக் கட்டம்தான் எயிட்ஸ் HIV ஆல் தாக்கப்பட்ட ஒருவன் கிட்டதட்ட 10 இருந்து 15 வருடங்களுக் குள் எயிட்ஸ் (Acgnired Immune Deflciency Syndrome) என்ற மோசமான நிலையை அடைகின்றான்.

HIV பரவும் முறைகளுள் முக்கியமானது தாயில் இருந்து பரவுதலாகும். இது பரவும் முறையாவது கருப்பையில் இருந்து வளரும் சிசுவிற்கு பல ஊட்டச்சத்தை தாயிடமிருந்து கொண்டு சேர்க்கும் life line ஆன உயிர்க் கொடியையே (தொப்பிள் நாண்) கொடி யையே HiV தனது பாதையாக உபயோகித் துக்கொள்கிறது. சிசுவைப் பாதுகாக்க சிசு

யைச் சுற்றியிருக்கும் அமினியபாய் பொருள் Amniotic fluid யிலும் HIV கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த வகையை விட பிரசவத்தின்போது கூட HIV கள் சிசுவைச் சந்திக்கும் வாய்ப்பு உண்டு.

இந் நோய் பிரதானமாக இளம் சமுதாயத்தினரிடையே தான் அதிகம் பரவி வருகின்றது. இதில் முக்கியமாக Sexual behaviours) பாலுறவு மூலம் தொற்றுதலடைகின்றன. அதாவது சமுகப் பழக்க வழக்கங்களில் ஒன்றான ஒருவரை ஒருத்தி என்ற கொள்கையைக் கடைப் பிடிப்பதன் மூலம் இந்நோய் ஏற்படுவதைப் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தலாம். ஓரினச்சேர்க்கை (Homoexual) யினாலும் இது பரவுகிறது. இதை விட ஊசிகள் மூலம் போதைவஸ்து ஏற்றுவதன் மூலமும் இந் நோய் பரவுகின்றது. ஆகவே மானிடப்பிறப்பெடுத்த நாம் எமது ஒழுங்கற்ற நடத்தையினாலும் கவலையீனமாக நடந்து கொள்வதனாலும் எம்மை நாமே அழித்துக் கொள்ளாமல் எம்மை நாமே பாதுகாப்போமாக.

Int. த பிரகாசன்

தலைவர் (94/95)

எதிரியை எவன் குறைவாக மதிப்பிடாமலும் மிகைப்பட கருதாமலும் செயலாற்றுகிறானோ அவனே போரில் வெற்றியடைவான்.

— நெப்போலியன்

மகாஜன தீப மலரே வாழ்க !

காயத்திரி அரைக்கும் ஆலை

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

மகாஜன தீப மலரே உனது சேவை தொடரட்டும் !

தற்கால நாகரீகத்திற்கேற்ற சகல விதமான பிடவைத் தினிசுகளுக்கும் மற்றும் வெளிநாட்டு சேலைகள், திருமண வைபவங்களுக்கு ஏற்ற பட்டுவேட்டி, சால்வை, கூறைச்சேலை வகைக்கும் புகழ்பெற்ற ஸ்தாபனம்

ரஞ்சனாஸ் ரெக்ஸ்

RANJHAMAS TEXS

No. 4, CENTRAL MARKET, CHUNNAKAM.

# அறிந்து கொள்ளுங்கள்....

1) சோமாலியா நாட்டில் 28.5 அடிகள் உயரமான கறையான் புற்று ஒன்று உள்ளது. இதுவரை இதுதான் உலகின் மிக உயரமான கறையான் புற்று.

2) இரவு இருளில் ஒட்டகங்கள் வாகனங்களுடன் மோதி பாரிய விபத்துக்களை விளைவிப்பது மத்திய கிழக்கு நாடுகளில் சர்வசாதாரணம் ஆகும்.

3) எமது உயரத்தின் ஏழில் இரண்டு பங்கினை காலில் உள்ள தொடை எலும்பு எடுத்துக்கொள்கிறது. உடலில் உள்ள எலும்புகளில் எல்லாம் கூடிய உயரம் உடையது இதுதான்.

4) எமது வாய் தொடக்கம் குதம் வரையான உணவுக்குழாயின் நீளம் 30 அடி ஆகும்.

5) 4700 வருடங்கள் வயதுடைய பழமை வாய்ந்த உயிருடைய பைன் மரமொன்று கலிபோனியாவில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவல்ல ஆச்சரியம் இம்மரம் இன்னமும் 1000 வருடங்கள் வரையில் உயிர் வாழும் என்பதுதான் ஆச்சரியம்.

6) உலகிலேயே மிகமிக நீளமான நகத்தை வளர்த்து வைத்திருப்பர் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஸ்ரீதர் மல்காஜிசியால் இவர் 42 வருடங்களாக நகமே வெட்டவில்லையாம்.

7) மாமிசம் உண்ணும் டைனோசர் முட்டையை 1993 இல் கண்டுபிடித்தவர் அமெரிக்க இயற்சினத மியூசியத்தை சார்ந்த திருமார்க்தொரெல்

8) இலங்கையின் சரித்திர சமூக கலாச்சார அம்சங்களை விளக்கி ஆங்கில மொழியில் நூல் எழுதிய ஆங்கிலப் பெருந்தகைகள் றொபேர்தொக்ஸ், ஜேன்ஸ்ரில் லியனெட் வூல்ப்

9) ரூபாஸி ராம்தாஸ் என்னும் பெயருள்ள இந்தியாவின் பம்பாய் நகரத்தைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமி 1994 ஓகஸ்ட் தினங்களில் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து சாதனை புரிந்தார்.

10) தற்போது வியாழனுடன் மோதிய வால் வெள்ளி சூமேக்கர் லெதி 9 ஆகும் இது யூலை 16 - 1994 இல் மோதியது

11) குளிர்கால ஒலிம்பிக்போட்டி 1994 ஒக்ரோபர் தினங்களில் நோர்வே நாட்டில் நடைபெற்றது

12) எயிட்தினம் டிசெம்பர் 1-ம் திகதி ஆகும். 1994 இல் உலக எயிட்ஸ் தினம் 7 வது முறையாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

13) இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் தலைவகராக கலாநிதி கஸ்தூரி ரங்கன் உள்ளார்.

14) இலங்கையில் அமைக்கப்பட்டுவரும் புதிய சர்வதேச விமான நிலையம் "கிங்ரா கொட்ட".

15) கிரிக்கெட் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராகத்திகழ்பவர் சச்சின் ரெண்டுல்கன்

16) பிளவுபட்ட ரஷ்சியாவின் தலைவர் பி. வி பொரிஸ் யெட்ஸின்

17) இலங்கையில் முதல் முதல் முத்திரை வெளியிடப்பட்டது 01 - 04 - 1957

18) நமது நாட்டில் இலவசக் கல்வி புகுத்தப்பட்டது ஜனவரி 1945.

19) மீன்கள் எப்போதும் வாயைத் திறந்து மூடிக்கொண்டிருப்பதை காணலாம் இதுதான் அவை சுவாசிக்கும் முறை ஆகும். நீர் வாய்க்குள் நுழைந்து தலையின் இருபுறமும் உள்ள சதைமடிப்புக்களான பூக்கள் வழியாக வெளியேறுகிறது. அப்போது பூக்கள் நீரில் கலந்துள்ள பிராணவாயுவை எடுத்துக் கொள்கின்றன.

Int த. வசந்தராணி
95 வர்த்தகம்

# 94 / 95 ம் ஆண்டிற்கான சிறந்த இன்ரறக்ட் கழக அங்கத்தவர்கள்

1) நடராசா வைகுந்தன்
(94 / 95 பொருளாளர்)
(95 வர்த்தகப் பிரிவு)

2). லதா வைத்திலிங்கம்
(94 / 95 உபசெயலளர்)
(95 வர்த்தகப் பிரிவு)

தன்னலமற்ற சேவையை நோக்காகக் கொண்ட [எமது இன்ரறக்ட் கழகத்தின் குறிக்கோளுக்கு முன்னுதாரணமாக நடந்து மற்றைய அங்கத்தவர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்து எமது கழகத்தின் வளர்ச்சியின் படிக்கற்களாய் இருந்த கழக அங்த்தவர்களில் மிகமுக்கியமான படிக்கல்லாய் நின்று எமது கழகத்தின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் முன்னின்று உழைத்த இவ்விரண்டு அங்கத்தவர்களுக்கும் எமது கழகத்தின் பாராட்டுகள் என்றும் உரித்தாகுக.

# 1990 — 1995 காலத்தில் சேவையாற்றிய தலைவர் செயாளர் விபரம்

1990 / 91

தலைவர் : Int த. செந்தில்குமார்
செயலாளர் : Int ப. நிமலன்

1991 / 92

தலைவர் : Int பா. முகுந்தன்
செயலாளர் Int எம். ரூபராஜ்

1992 / 93

தலைவர் : Int மயூரதாஸ்
செயலாளர் : Int சி. யசிதரன்

1993 / 94

தலைவர் : Int மு. சதீஷ்பாலமுருகன்
செயலாளர் : Int சி. றோசீதன்

1994 / 95

தலைவர் : Int த. பிரகாசன்
செயலாளர் : Int மு. கிரிதரன்

1995 / 96

தலைவர் : Int சி. கஜேந்திரா
செயலாளர் : Int ச. இராஜீவன்

# எமது கழகம் நடத்திய பொது அறிவுப் போட்டியில் பரிசில் பெறுவோர்

மேற்பிரிவு (A/L)

1-ம் இடம் க கோதலன்
2-ம் இடம் க கமலநாதன்
3-ம் இடம் ந நிரோஜன்

மத்தியபிரிவு

1-ம் இடம் இ சிவாஜினி
2-ம் இடம் சஜிதா
3-ம் இடம் க பசசிகேஷ்

கீழ்ப்பிரிவு

1ம்- இடம் யோ கார்த்திகா
2-ம் இடம் ந பரணிதரன்
3-ம் இடம் ச மேனகா

# நாடகக் கலையின் பண்புகள்

மனித வாழ்க்கையில் எம்மைத்தொட்ட எம்மை மிகவும் அழுத்துகின்ற எமக்குத் தெளிவான சில விடயங்களையோ, கற்பனைசார் விடையங்களையோ குறித்த நேரத்தில் பார்வையாளர் முன்னிலையில் நிகழ்த்திக் காட்டப்படும் செயல்வடிவமே நாடகம் எனப்படும்.

நாடகம் ஒரு அவைக்காற்றுக்கலை (Performing art) ஆகும். அதாவது பார்வையளருக்கு முன்னே நிகழ்த்திக்காட்டப்பட வேண்டிய கலை ஆகும். நடிகரும் பார்வையாளரும் இணையும் போதே நாடகம் ஒன்று நிகழும். நடிகரோ அல்லது பார்வையாளரோ இன்றி நாடகம் ஒன்று மேடையேற முடியாது. நாடகம் ஆனது பார்வையாளருக்கு முன்னே நிகழ்த்திக்காட்டப்படும் கலைவடிவமாக இருப்பதனால் நாடகம் ஓர் மறுதாக்கக் கலையாகும். (Reactive art) அதாவது மேடையில் ஏற்றப்படும் தாக்கத்தினால் அவையிலே ஓர் மறுதாக்கம் ஏற்படும் அல்லது அவையில் ஏற்றம் தாக்கத்தினால் மேடையில் ஓர் மறுதாக்கம் ஏற்படும் இல்லையெனில் மீண்டும் ஒருமுறை மேடையேறும் போதிலாவது ஓர்சிறு மாற்றம் நடைபெறும். எனவே நாடகம் விமர்சனம் எழும் கலைவடிவம் ஆகும். இவ் விமர்சனக் கலையினால் நாடகக் கலை வளரும் சில விமர்சனங்கள் நாடகத்தினை பழுதாக்கி விடுவதும் உண்டு.

நாடகம் ஓர் இயங்குகலை (Dynamic art) கூத்து என்பதனைக் குறிப்பிட்ட கவிஞர் ஒருவர் மேற்கு வானம் போல் ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டே இருக்கும் ஒவ்வொருகணத்திலும் புதிய புதிய தோற்றங்களைக் காட்டும் நாடகத்தின் மொத்த அசைவும் நேரத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இதனால் இதை நேரக் கலை (Time art) என்பர்.

நாடகம் ஓர் தொடர்பு சாதனக் கலை ஆகும் (Communication Art) அதாவது மக்களை பல்வேறு சமுதாயத்துடனும் மக்களை அரசுடனும் தொடர்புபடுத்தும் கலைவடிவம் ஆகும். இதன் காரணமாக நாடகம் சிறந்த ஒரு பிரச்சார ஊடகமாகவும் தொழிற்படுகின்றது. பெண்ணடிமை, சாதிஒழிப்பு, கல்வி மாற்றம், மூடநம்பிக்கை, அரசியல் பிரசாரம் என்பன இவ் அம்சத்துடன் இணைக்கின்றது.

நாடகம் என்பது சமூக ஒன்றிணைப்புச் சின்னமாகக் காணப்படுகின்றது பல்வேறுபட்ட மக்களையும் தம்முள்தாம் இணைக்கின்றது. நடிகரையும் பார்வையாளரையும் இணைக்கின்றது நாடகத்தில் பங்கேற்கின்ற பல்வேறு விதமான கலைஞர்களையும் இணைக்கின்றது. அதாவது நாடக ஆசிரியர், நடிகர், தயாரிப்பாளர், நெறியாளர், இசையமைப்பாளர், பாடகர், பின்னணி வாத்தியக் கலைஞர், ஒலி ஒளி அமைப்பாளர், உடை விதானிப்பாளர், மேடை நிர்வாகி போன்ற கலைஞர்கள் இணைகின்றார்கள். அதுமட்டுமறி நாடகத்தில் சங்கீதம், நடனம், ஓவியம், சிற்பம், இலக்கியம் போன்ற பல கலைஞர் இணைவதால் இதனைக் கூட்டுக்கலை என்றும், கலைககளின் அரசன் என்றும் கூறுவர்.

நாடகம் ஓர் பண்பாட்டு கையளிப்பு சாதனம் ஆகும். நாடகம் என்பது மனித வாழ்க்கையினைப் போலச்செய்கின்ற கலைவடிவமாக இருப்பதனால் மனிதனின் பழக்கவழக்கம், சமயம், உடை, மொழி போன்றன நாடகத்திலும் பிரதிபலிக்கின்

றது. நாடகமும் ஓர் இலக்கியம் என்ற வகையில் இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி எனவே நாடகமும் சமூதாய மாற்றங்கள் பிரச்சனைகள் என்பவற்றைக் காட்டும். உதாரணமாக கலைபண்பாட்டுக்கழகத்தினரின் இன்றைய கால நடவடிக்கை களைக் குறிப்பிடலாம்.

நாடகம் ஓர் கட்புலக்கலை ஆகும். (Visural art) அத்துடன் செவிப்புலக்கலை யும் ஆகும். நாடக நடிகர்கள் தனது நடிபாகங்களை தனது குரலாலும் தனது உடல் அசைவாலுமே வெளிப்படுத்துகின்றான். எனவே நாடகத்தில் குரல் அசைவு என்பன முக்கியம் பெறுவதனால் பார்வையாளன் பார்த்தும் கேட்டுமே ரசிக்கிறான். நடிகர்கள் தன் குரல், உடல், உள்ளம், என்ற மூன்று ஆயுதங்களாலுமே நடிக்கின் றான் என்பர். வானொலி நாடகம் போன்றன. தனித்து செவிப்புலக் கலையாகவே இருக்கின்றது.

நாடக கலையரங்கில் இன்னொரு முக்கியமான மூலகம் வெளியாகும். (Spac e) ஆகவே நாடகத்தை வெளிக்கலை என்றும் கூறலாம். அரங்கு பற்றி நன்கறிந்த நெறி யாளர்கள் அரங்கின் பல்வேறுமட்டத்தில் உள்ள வெளிகளையும் பாதிக்க முற்பட்ட தைக் காணலாம்.

நாடகமானது மனித முரன்பாடுகளை அதாவது தனிமனிதனுக்கும் சமுதாயத் திற்குமான பிரச்சனை சமுதாயத்திற்கும், சமுதாயத்திற்குமான பிரச்சனை, மனித னுக்கும் மனச்சாட்சிக்குமான பிரச்சனை போன்றவற்றினைக் காட்டுகின்றது. எனவே உணர்ச்சித்தூய்மையை ஏற்படுத்தி சமுகத்தை திருத்துகின்றது, சமுகப் பிரச்சனை களை சுட்டிக்காட்டி அவற்றினை சீர்திருத்த அவற்றிற்கு தீர்வு வழங்குகின்ற தீர்வக மாக செயற்படுகின்றது. சமுகத்திற்கு அறிவுரை வழங்கும் கருவியாகவும் செயற்படு கின்றது. இந்தவகையில் நாடகம் சமுகம் முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது.

இன்று எமது தேசத்தில் நாடகக் கலை வளர்ச்சிப் பாதையில் நடைபயிலு கின்றது. நாடகக் கலையின் வளர்ச்சிக்கு அன்றும் இன்றும் பல அறிஞர்கள் அரும் பாடுபட்டு வருகின்றனர். அவர்களின் முயற்சி வீண்போகாது எமக்கு என்று ஓர் தேசிய நாடக மரபு உருவாக்கப்படும். அது செவ்வனவே வளர்த்தெடுக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

நாடகக்கலை எமது தேசத்தில் வாழ்க! வளர்க!

Int. க. தர்சினி
உப தலைவர்

□ □ □

சுதந்திர உணர்வு என்பது எந்த ஒரு ஜீவராசிக்கும், இயல்பாக எழுகின்ற உணர்வு ஆகும். இது கடவுளின் அருளாகும். அடிமை நிலை கடவுளின் கட்டளைக்கு நேர்விரோதமான ஒரு நிலையாகும்.

— மகாத்மா காந்தி

□ □ □

முழங்காலில் நின்று வாழத்தொடங்கு முன் சாவதற்கு தயாராக இரு.

— சோக்ரட்டீஸ்

# இருதய நோய்கள் (Heart Diseases)

இது ஒரு தனி நோயல்ல. இதில் பல வகைகளும் பல தரங்களும் உண்டு இதயம் வேலைசெய்துகொண்டே தன்னைச் சீராக்கிக் கொள்ளும். ஆற்றலுடையது எனினும் சில மாற்றங்களை முற்றாக மேற்கொள்ள முடிவதில்லை இதயநோய்களில் முக்கிய சிலவற்றைக் கருதலாம்.

## i] பெரிதான இதயம் [Enlarged Heart]

இதயம் தொடர்ந்து உயர் அமுக்கத்திற்குட்படின் கூடியளவு குருதியை வழங்குவதற்காகப் பெரிதாகும். இது தொடர்ந்து நிகழுமாயின் ஒரு நிலையில் அது சுருங்கும் திறனை இழக்கும் இது வலது அல்லது இடது அறைகளில் நேரக்கூடியதாகும். சிகிச்சை அளிக்கப்படாத உயர் அமுக்கத்தினால் இடது அறை பாதிக்கப்படும். நுரையீரலில் சீதப்பொருள் சேர்ந்து நுரையீரல் சுற்றோட்டத்தில் அமுக்கம் அதிகரித்தல் வலது இதயவறை பெரிதாவதற்கு பிரதான காரணம் ஆகும்.

## ii] கொலஸ்திரோல் படிவதால் ஏற்படும் நோய்கள் :

பெருநாடியிலிருந்து வலது, இடது முடியுருநாடியினால் குருதி இதயத்திற்கு வழங்கப்படுகிறது இது உள் விட்டமுள்ள நாடியாக அமைந்து, இதயத்தசை முழுவதற்கும் கிளைகளைச் செலுத்தும், நாடிகளுள் கொலஸ்திரோல் படிவதால் அவற்றின் உள் விட்டம் குறையும். இதனால் இதயத்திற்குள் செல்லும் குருதியின் அளவும் குறைவும் இதன் விளைவாக இதயத்தசைகளுக்கு ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படும். இதனால் இதயம் பலவீனம் அடையும்.

## அஞ்சனா பெக்ரோறிஸ் [Angina Pectoris]

இது இதயநாடிகளில் கொலஸ்ரோல் படிவதால் வயதானவர்களில் ஏற்படும் நோய்களுள் ஒன்று இதன் ஆரம்ப அறிகுறி இளைக்க வேலை செய்வதால் நெஞ்சில் நோ ஏற்படுதல். ஆறியதும் நோ மாறும் இதை அபாய அறிகுறியாக எடுத்துக்கொண்டு சிறந்த இதயநோய் வைத்தியரிடம் சிகிச்சை பெறுவதுடன் அவருடைய ஆலோசனைகளின்படி செயற்படவேண்டும்.

## மாரடைப்பு [Heart - Attack]

இதயத்திற்கு குருதியை எடுத்துச்செல்லும் நாடிகளில் அல்லது அவற்றின் கிளைகளில் கொலஸ்திரோல் படிந்து ஒடுங்கினால் இச் சுவர்களில் குருதிச்சிறு தட்டுகள் பிடிபட்டுச்சேரும். இக் குருதிச்சிறுதட்டுக்கள் குருதியை உறையச் செய்து குழாயை ஓரிடத்தில் அடைந்துவிடும். இதனால் அடைபட்ட இடத்திற்கு அப்பாலுள்ள பகுதிக்கு குருதி கிடைக்காது அவை சுருங்கமுடியாத நிலையும் (மீள் தகவை இழக்கும்) அதனால் அவ்விடத்தில் வலியும் ஏற்படும். அப்பகுதித்தசைகள் இறந்துபோக அவ்விடம் நாரிழையத்தால் மூடப்படும். தசை தாக்கப்பட்ட இடம் சிறிதாயின் ஒருவர் பிழைத்து பல வருடங்கள் வாழலாம். பெரிதாயின் ஒருதாக்கத்தினால் ஒருவர் இறக்கவும் கூடும். 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் 50 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் இப்படிப் பாதிக்கப்படுவதுண்டு. ஒரு சிலர் 20 – 40 வயதிலும் பாதிக்கப்படலாம்.

இந் நோய்க்கு பராமரிப்பு முறையே சிறந்த மருந்து. வைத்தியரின் ஆலோசனைப்படி தாக்கப்பட்ட இதயச்சுவர் மீளநார்களால் அமைக்கப்படும் வரை பூரண ஓய்வு எடுத்தல் வேண்டும். இதற்கு குறைந்தது 6 வாரங்கள் ஆகும். குருதி உறைதலைத் தடுக்கும் மருந்துகளும் மனதை நிம்மதிப்படுத்தி ஓய்வெடுக்க உதவும் மருந்துகளும் தேவைப்படும்.

## இதயநோயால் பாதிக்கப்படுவதிலிருந்து பாதுகாத்தல்

இதயநோய் காரணமாக இளமையிலே மரணம் சம்பவிக்கலாம். முற்கூட்டியே பாதுகாப்பெடுப்பின் இதயநோய் வராது தடுக்க முடியும். அல்லது ஒருமுறை வந்தாலும் பின்னர் பலவருடங்களுக்கு வாழ முடியும்.

## சில தற்காப்பு முறைகள்

1) இதயத்தில் வலிப்பு – இடக்கை கழுத்து உழைவு சிறிது தூரம் நடந்தால் அல்லது மாடிப்படிகளில் ஏறினால் இளைப்பு முதலிய அறிகுறிகள் காணப்பட்டால் உடனே தகுந்த ஆலோசனை பெறப்படல் வேண்டும். இவ்வறிகுறிகளுள் சில இதயத்தோடு சம்மந்தப்படாதவை ஆகவும் இருக்கலாம்.

2) 35 வயதிற்கு மேல் புரதம், கொழுப்பு அளவிற்கு மிஞ்சி எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். விலங்குக் கொழுப்புக்களை நன்றாகக் குறைக்க வேண்டும். விலங்கு உணவுகளில் மீன் உணவு எடுக்கலாம். தாவர உணவுகளில் தேங்காய் எண்ணெய்யில் கொலஸ்திரோல் இருப்பதால் அது தவிர்கப்படல் வேண்டும்.

3) உடல்நிலை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகரிக்காது பாதுகாக்க வேண்டும்.

4) நாளாந்தம் ஓரளவு உடற்பயிற்சி செய்தல் வேண்டும். நடத்தல், வீட்டுத்தோட்டம் செய்தல் போதுமானது.

5) மனக்குழப்பங்கள், கவலைகள் உடலைப்பாதிக்காதவாறு நிதானமாக நடந்து கொள்ளல்வேண்டும். மனத்திருப்தி முயற்சித்த ஏதாவது கிடைக்காதுவிடின் விரக்தி அடையாமை, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற மனப்பான்மை துன்பமும் இன்பமும் மாறிமாறி வரும் என்ற உண்மை உணர்வு தெய்வசித்தம் எதுவோ அதுவே நடக்கும். என்ற அறிவு ஆகியவற்றை உணர்து வாழ்க்கையில் கடைப்பிடித்தல் வேண்டும்.

6) மது அருந்துதல், புகைப்பிடித்தல். போன்ற தீய பழக்கங்களை முற்றாக மறைத்தல் அல்லது குறைத்தல்.

7) பெற்றோருக்கு இதயப் பலவீனம் என்றால் பிள்ளைகள் அவர்கள் மீது கூடிய கவனமெடுக்க வேண்டும்.

8) குடும்பயின் ஒவ்வொருவரும் வருடத்திற்கு ஒருமுறை வைத்திய பரிசோதனை செய்துகொள்ளுதல் நன்று.

* Asprine மருந்து இதய நோயாளிகளுக்கு வழங்கப்படுவது என்பது முக்கியமானதாகும். இது குறிப்பாக மாரடைப்புக்கு மருந்தாகும்.

Int த. கிருஷ்ணராஜா
வர்த்தகப் பிரிவு

# நம்பிக்கை அலகுகள்

இலங்கையின் மூலதனச்சந்தையில் அண்மைக்காலத்தில் இருந்து முக்கியம்பெற்று வரும் அமைப்பே நம்பிக்கை அலகுகள் ஆகும். '' 1991-ம் ஆண்டு பிணையங்கள் மாற்று ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் '' உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும். அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள் என்பது பணத்தை முதலீடு செய்ய விரும்புகின்ற பொது மக்களிடம் இருந்து அலகுப்பத்திரம் விற்ற பணத்தைத் திரட்டி அவற்றைப் பொருத்த மான இலாபகரமான துறைகளில் முதலீடு செய்து வருமானங்களைப் பெற்று அதில் குறித்த சதவீதத்தை மீண்டும் முதலீட்டாளருக்கு பகிர்ந்தளித்து வருகின்ற நிறுவனங்க ளைக்'' குறிக்கும்.

இவ் அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள் முதலீட்டாளர்களிடம் இருந்து பெற் றுக்கொள்ளும் பணத்தை பல்வேறு நிதியங்களில் முதலீடு செய்கின்றது. இவ்வாறு நம்பிக்கை நிதியம் முதலீடு செய்கின்ற நிதியங்களாக:

* சொத்துக் கொள்வனவு
* பங்குகளின் முதலீடு
* தொகுதிக்கடன் பத்திரங்கள்
* திறைசேரி உண்டியல்கள்
* அரச முறிகள்
* வங்கிகளில் வைப்பு
* பணச் சந்தையில் குறுங்கால கடன் வழங்கள்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையில் குறிப்பிடுகின்ற தொழிற்படுகின்ற நம் பிக்கை அலகுகள் பின்வருவன காணப்படுகின்றன.

## 1] சீ பாங்கு (B) நம்பிக்கை அலகு (Cey Bank Unit Trust)

இது 1992 இல் அமைக்கப்பட்டது. இதன் முகாமைக் கம்பனி '' நம்பிக்கை அலகு முகாமைத்துவக் கம்பனி (தனியார்) லிமிடெட்' Unit Trust Management Company (P.V.T) Ltd ஆகும். இதன் நம்பிக்கைப்பொறுப்பாளர் 'இலங்கை வங்கி' ஆகும்.

## 2] தேசிய ஒப்புரவு நிதியம் National Equity Fund

இது 1991 இல் இருந்து செயற்படத்தொடங்கியது. இதன் முகாமைக் கம்பனி 'வரையறுக்கப்பட்ட தேசிய சொத்து முகாமைக்கம்பனி' ஆகும். இதன் நம்பிக்கைப் பொறுப்பாளராக ஹொங்கொங் அன் சங்காய் வங்கி நியமிக்கப்பட்டுள்ளது.

## 3] கொம்புறெஞ் நம்பிக்கை அலகு Comfront Trust Fund

இது 1992 இல் உருவாக்கப்பட்டது. இதன் முகாமைக்கம்பனி 'வர்த்தக நிதி முகாமைக் கம்பனி" ஆகும்.

### பிரமிட் நம்பிக்கை அலகு : Pyramit Unit Trust

இது 1992 இல் உருவாக்கப்பட்டது இதன் முகாமைக் கம்பனி 'வரையறுத்த சி. கே. என். நிதி முகாமை (தனியார்) கம்பனி' ஆகும். இதன் நம்பிக்கைப் பொறுப்பாளராக ஹொங் ஹொங் அன் சங்காய் வங்கி செயற்படுகிறது.

உருவாக்கப்படும் நம்பிக்கை நிதியம் ஒன்றில் மூன்று பிரிவினர் அங்கத்துவம் பெறுவர். அவர்

1) அலகு உடமையாளர் / நம்பிக்கை கூறு உரிமையாளர் / அலகுப் பத்திர உரிமையாளர்.
2) நிதி முகாமையாளர் / முகாமைக்கம்பனி
3) நம்பிக்கையாளர் / நம்பிக்கைப் பொறுப்பாளர்

### 1) அலகுப்பத்திர உரிமையாளர்கள்

நம்பிக்கை அலகுகளில் வருமானத்தை உழைக்கும் நோக்குடன் பணத்தை முதலீடு செய்ய முன்வருவோரையே அலகு உடமையாளர் எனலாம். வருமானம் உழைப்பதற்கு நம்பிக்கை அலகு ஒன்றில் பணத்தை முதலீடுசெய்து அலகு உரிமையாளர்களாக வருவதற்கு மூன்று பகுதியினர்க்கே உரிமையுண்டு. அவர்களாவன :

1) இலங்கையர்கள், இலங்கையில் உள்ள கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள்.
2) இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இலங்கைக்கு வெளியே வசிக்கும் இலங்கைப் பிரஜை உரிமைபெற்றவர்கள்.
3) பெற்றோர் 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் பெயருக்கு அலகுப்பத்திரங்களைக் கொள்வனவு செய்யலாம்.

### நம்பிக்கை அலகுச் சான்றிதழ்

நம்பிக்கை அலகுகளில் பணத்தை முதலீடுசெய்வோருக்கு சான்றாக வழங்கப்படுவதே அலகுப் பத்திரங்கள் / நம்பிக்கை அலகு சான்றிதழ் ஆகும்.

நம்பிக்கை அலகுகளில் பணத்தை முதலீடு செய்து சான்றிதழ்களை பெற்றுக் கொண்டவர்கள் பின்வரும் மாற்று வழிகளை கையாள முடியும்.

1) தாமே வைத்திருக்கலாம்.
2) குடும்பத்தினர்க்கு கைமாற்றலாம்
3) நிதிப் பிரச்சனையின்போது முகாமைக் கம்பனிக்கு விற்றுப் பணமாக்கலாம்
4) வங்கியில் பொறுப்பாகக் கொடுத்து கடனையும் பெறலாம். என்பவை ஆகும்.

நம்பிக்கை அலகின் அலகுரிமையாளர் ஒருவர் வழக்கப்படும் இலாபங்களை அலகுரிமையாளர் பின்வரும் முறைகளில் ஒன்றைக் கையாளலாம்.

1) நேரடியாக காசாக வழிவழைக்கலாம்.
2) தனது வங்கிக் கணக்கிற்கு சேர்ப்பிக்கலாம்.
3) அலகுப் பத்திரங்களில் மேலதிக முதலீட்டினை மேற்றுக்கொள்ளலாம் என்பன ஆகும்.

நம்பிக்கை அலகு உரிமையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள வரிச்சலுகைகள் ஆவன :

1) ஓர் ஆண்டுக்கு மேல் அலகுப்பத்திரங்களை வைத்திருந்து பின்னர் விற்பனை செய்யின் அதில் கிடைக்கும் மூலதன இலாபம் வரிவிலக்குப்பெறும்.

2) நம்பிக்கை அலகின் வரிவிலக்கு அளிக்கப்பட்ட இலாபத்தில் இருந்து அலகுரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட இலாபம் வரிவிலக்குப்பெறும்.

3) சொத்துக்களை விற்பனை செய்து கிடைக்கப்பெறும் இலாபத்தை நம்பிக்கை அலகில் முதலீடு செய்யின் சொத்து விற்பனையால் பெற்ற மூலதன இலாபம் வரிவிலக்குப் பெறும்.

## அலகு உரிமையாளர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

1) இலாபத்தை உச்சப்படுத்திக்கொள்ளலாம்.
2) பொருத்தமான முதலீட்டுத்துறையை இலகுவில் தெரிந்தெடுக்கலாம்.
3) முதலீட்டுக்கு வரையறுக்கப்பட்ட கொழும்பு ....
4) பத்திரங்களை வங்கியில் கொடுத்து கடன்பெறலாம்.
5) தேவைப்படும்போது முகாமைக் கம்பனிக்கு விற்று பணமாக்கிக்கொள்ளலாம்.
6) குடும்பத்தவருக்கே பத்திரங்களை கைமாற்றிவிடலாம்.
7) வருமானங்களுக்கு வரிச்சலுகையைப் பெறலாம்
8) பல்வேறு நிறுவனங்களின் உரிமையாளர் ஆகிவிட முடியும்

## நம்பிக்கையாளர் / நம்பிக்கைப்பொறுப்பாளர் Trustee

நம்பிக்கை அலகுகள் தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த பொறுப்பாக இருப்பவரே நம்பிக்கையாளர் எனப்படுவர். இவரது பணிகளாக :

1) அலகுரிமையாளரிடம் இருந்து பணத்தை திரட்டுதல்
2) முதலீடுகளுக்கான துறை தீர்மானித்து முதலீடு செய்தல்
3) வருமானங்களைத் திரட்டுதல்
4) வருமானங்களை அலகுரிமையாளர்களுக்கு பகிர்ந்தளித்தல்
5) கணக்கு ஆய்வு செய்தல்

## முகாமைக் கம்பனி / நிதிமுகாமையாளர் Management Company

நம்பிக்கை அலகின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நிர்வகிப்பதற்காக உருவாக்கப்படும் ஓர் சபை / குழு ஆகும். அதாவது அலகுப்பத்திர உரிமையாளர்களது நலன் கருதி நம்பிக்கை பொறுப்பாளரது ஆதனங்களை நிர்வகித்தல் முகாமை செய்வதற்கென உருவாக்கப்பட்ட சட்டத்தினால் வலுவாக்கப்பட்ட ஆட்கள் குழு / அமைப்பு முகாமைக் கம்பனி எனப்படும்.

## முகாமைக் கம்பனியின் கடமைகள்

1) அலகுப் பத்திர உரிமையாளரது நலன்களைப் பாதுகாத்தல்
2) இலாபகரமான முதலீட்டுத்துறைகளைத் தீர்மானித்தல்
3) நம்பிக்கை பொறுப்பாளரது ஆதனங்களை முகாமைசெய்தல், காப்புறுதிசெய்தல்.
4) நம்பிக்கை அலகுகளுக்கான கூட்டங்களைக் கூட்டுதல் அலகுப்பத்திரங்களின் விற்பனை விலைகளைத் தீர்மானித்தல்
5) நிதியிட்டங்களைப் பொறுப்பேற்றல்
6) அலகுப்பத்திர விற்பனையின்போது அலகுப்பத்திரங்களைப் பொறுப்பேற்றல்
7) நம்பிக்கை அலகுகளின் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல் பதிவேடுகளை வைத்திருத்தல்

## நம்பிக்கை உறுதி / நம்பிக்கை உடன்படிக்கை

நம்பிக்கை அலகுகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஏற்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையே இதுவாகும். அதாவது நம்பிக்கை அலகுகள் செயற்படுதல் தொடர்பாக முகாமைக்கம்பனிக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும் இடையே ஏற்படும் ஓர் உடன்படிக்கையே நம்பிக்கை உறுதியாகும்.

## நம்பிக்கை அலகு ஒன்றிலே பொதுவாக பின்வரும் விடயங்கள் இடம் பெறும்

1) முகாமைக் கம்பனிக்குள்ள கடமைகள்
2) நம்பிக்கையாளருக்குள்ள பொறுப்புக்கள் கடமைகள்
3) அலகுடமையாளருக்குள்ள உரிமைகள், நலன்கள்
4) அலகுடமையாளர் அலகுப்பத்திரங்களை விற்பனைக்கான உரிமைகள்
5) நம்பிக்கை, அலகு ஒன்றின் முதலீட்டுத்துறைகள்
6) கூட்டங்கள் கூட்டப்படும் ஒழுங்குமுறை
7) நம்பிக்கையாளரை நம்பிக்கை அலகின் கணக்குகளை வருடா வருடம் பிரசுரிக்கும்படி கோரும் நிபந்தனைகள்

## நம்பிக்கை அலகுக்கான வரிச்சலுகைகள்

1) 5 ஆண்டுகளுக்கு வருமான வரியில் விலக்கு
2) நம்பிக்கை அலகில் கிடைக்கப்பெறும் பங்கு இலாபம் வரியில் இருந்து விலக்குப்பெறும்.
3) நம்பிட்கை அலகில் பங்கு விற்பனை மூலம் எழும் முலதன மிகை வரிவிலக்குப் பெறும்.

Int சோ. சத்தியசீலன்
1995 வர்த்தகப் பிரிவு


**வாழ்த்துகிறோம் !**

அழகுசாதன அலங்கரிப்புப் பொருட்கள் தைப்பதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் DSI BATA பாதணி வகைகள் யாவற்றையும ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளச் சிறந்த இடம்

**அலோமாஸ்**

மணப்பெண்ணின் அலங்கரிப்புக்கான தலை நகை கால் சதங்கை என்பன வாடகைக்கு இங்கு பெறலாம்.

பஸ் நிலைய முன்பாக, Dr சுப்பிரமணியம் வீதி. சுன்னாகம்.

# இன்றைய கல்விமுறைமை எமது எதிர்காலத்தின் தேவையை பூர்த்திசெய்யப் போதுமா ?

ஒருநாட்டின் எதிர்காலம் கல்வியினாலேயே நிர்ணயிக்கப்படுகிறது ஒரு நாடு முழுமையாக அபிவிருத்தியடைவதற்கும் அந்நாட்டு மக்கள் சமூகம் உயர்வடைவதற்கும் ஏற்ற வகையில் அந்தநாட்டில் கல்வி முறை அமைக்கப்பட வேண்டும். என்பது கல்வித தத்துவஞானிகளின் கருத்து எனவே நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களில் கல்வித் திட்டங்கள் நடுவிடம் வகிக்கின்றன. நாட்டின் சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களுக்கும் கல்வி ஒரு வலுமிக்க சாதனம் ஆகையால் நாட்டின் மக்களுடைய குறிக்கோமுடனும் நாட்டுவளர்ச்சிக்காக உருவாக்கப்படும் வேறுபல திட்டங்களுடனும கல்வித்திட்டம் இணைந்திருத்தல் இன்றியமையாதது. அந்தவகையில் அபிவிருத்தியை நோக்கிப் பயணம் மேற்கொண்டிருக்கும் எமது நாட்டின் கல்வித்திட்டங்கள் ஆற்றல் மிக்க அறிவு ஜீவிகளான தேசப்பற்றாளர்களான நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களான உயர் மனித விழுமியங்களைக் கொண்ட இளம் பரம்பரை தோற்றம் கொள்ள எவ்வகையில் உதவுகிறது என விடைகாண முயலின் திருப்திகரமற்ற வேதனையான விடையை தருவதைக் காணக்கூடும்.

இலங்கை அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ள கல்விக்கொள்கையை எடுத்து நோக்கின் அது ஒரு குறுகிய பாடத்திட்டமாகவும் ஏட்டு கல்விமுறையாகவும், பரீட்சையை மையமாகக்கொண்டதாகவும் செயல்முறை கல்விக்கு எதுவித பங்குமே இல்லாது காணப்படுவது மனவருத்தத்திற்குரியதே.

வெளிநாட்டு கல்வி தத்துவ அறிஞரிடம் நம்நாட்டு கல்வியாளர் ஒருவர் ' ஐயா! இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வழங்கப்பட்ட பட்டங்களை நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லையே' 'என கேட்டபோது உங்கள் பல்கலைக்கழகங்களில் திறமைசாலிகள் உருவாகலாம். ஆனால் உங்கள் கல்வி முறையின்படி அற்புதமாக மனனம் செய்யும் ஆற்றல்பெற்றவர்களே பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகின்றனர். இங்குள்ள பிரச்சனைகளை மனனம் செய்வதால் எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை பிரச்சனை செயல்ரீதியாக யதார்த்தபூர்வமாக அணுகுபவர்களே எமக்கு தேவை அத்தகைய திறமை படைத்தவர்களாக அவர்கள் இருந்தலும் உங்கள் கல்விமுறை மூலம் எம்மால் அதை உறுதிசெய்துகொள்ள முடியாதுள்ளது'. என்றாராம் இந்த அறிஞரின் கருத்தே எமது கல்விக்கோட்பாட்டின் குறைபாடுகளை துல்லியமாக எடுத்துக்காட்டுவது உறுதி.

இந்த குறுகிய பாடத்திட்டத்தினடியாக ஏட்டு கல்விமுறையிலான இக் கல்வி மாணாக்கரை வெறும் பின்பற்றுவோராக அவரைப் பயிற்றுவிக்கிறதே தவிர தம் ஆற்றலைப்பயன்படுத்தி தாமே புதிய முறையில் செயற்படுவோராக பயிற்றுவிப்பதில்லை. இது ஆங்கிலேயர் காலத்திலிருந்து ஏற்பட்ட குறைபாடாகும் அதாவது சுஜமாக செயலாற்றும் தலைவர்களை உருவாக்குவதை காட்டிலும் அரசினர் கூற்றினை பின்பற்றுவோரை தயாரிக்கும் கற்றல் முறையே அன்றைய ஆங்கில அரசுக்கு பயனுள்ளதாக இருந்தது அக் கல்விமுறையில் இருந்து சுதந்திரமடைந்த பின்னரும் நாம் விடுபடாது இருப்பது சுட்டிக்காட்டக்கூடியதாக உள்ளது

எமது கல்விக் கோட்பாடு மாணவர்களை குறுகிய நோக்கைக் கொண்டவர்களாக, சமூக சிந்தனை அற்றவர்களாக தமக்கிடையே பொறாமையுள்ளம்

கொண்டவர்களாகவே உருவாக்குகின்றது. ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை என்னும் போட்டிப் பரீட்சை தொடங்கி க.பொ.த. (சா/த) க.பொ.த. (உ/த) என விரிந்து பல்கலைக்கழகம், தொழில் நிறுவனங்கள் என அப்பரீட்சை தொடர்கிறது. மாணவர்களும் பரீட்சைக்காகவே தம் கல்வியைத் தொடருகிறார்கள். எனவே சமூகத்தின் தேவைகளை மாணவன் உணருவதில்லை. மாறாக சக மாணவர்களையே விரோதியாக தனது சந்தர்ப்பத்தை பறிக்க முயலும் ஒரு பகைவனாக பொறாமையுடன் பார்க்கிறான் இதனால் அவன் சுயநலமுடையவனாக வளர்க்கப்படுகிறான். எனவே எமது கல்வி முறை அடிப்படை நோக்கிலேயே தவறிவிட்டமையை உணர முடிகிறது.

அடுத்து எமது கல்வி முறை செயல்முறைக்கல்விக்கு முக்கியம் கொடுக்கவில்லை மாறாக வகுப்பறையிலே ஆசிரியர் கற்பிப்பதும, பாடக்குறிப்புக்களை தருவதும் அதை மாணவர்கள் மனனம் செய்வதும பரீட்சையில் கற்றதை எழுதுவதுமே இன்றைய பாடத்திட்டம். எனவே சகல விடயங்களையும் ஏட்டுக் கல்வி மூலம் அறிகிறான். அவற்றை செயல்முறையில் நோக்கும்போது திக்குமுக்காடி விலகிவிடுகிறான். இதை வருமாறு கூறலாம்.

ஒருவன் தான் கற்ற மனையியல் பாடத்தில வரும் மில்க்ரொபி செய்யும் முறைபற்றிய ஆசிரிய குறிப்பை பிடித்து ரொபி செய்ய ஆரம்பிக்குறான் ஆசிரியரது குறிப்பின்படி செயற்பட்ட அவன் முடியும்தறுவாயில் இதமாக பதமாக பார்த்து இறக்கவும் என்னும் குறிப்பை படித்ததும் திக்குமுக்காடுகிறான் அது என்ன இதம் பதம் என அவனிடம் ஐயம் எழுகின்றது. மில்க்ரொபி அத்தோடு தின்றுவிடுகிறது. இதுதான் எமது கல்விமுறையின் குறைபாடு சமூகத்திலே மாணவாகளது திறனை கருத்தில் கொள்ளாது அவர்களது திறமைகளை வளர்க்க உதவாது மாறாக ஏட்டுக்கல்வி அறிவு கொண்ட மனனம் செய்யும் ஆற்றல்கொண்டவர்களை உருவாக்குவது மனவருத்தத்திற்குரியதே.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து பரந்து வளர்ந்து வருகிறது இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகிலே பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மேலை நாடுகள் கொம்பியூட்டருலகம் இலத்திரனியலுலகம் எனப் பல உலகங்களை கடந்து சென்றுகொண்டிருக்கிறது மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறிவருகிறது. இந்த அறிவுசார்ந்த யுகத்தில் வரையறுக்கப்பட்ட துறைசார் படிப்புக்கள் ஒரு பரந்த உலகப்பார்வையும் விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப்போவதில்லை எனவே நாம அறிவியல் சிந்தனையிலே பல தலைமுறைகள் பின்தங்கியுள்ளோம். இன்னிலமை தொடரும் போது எமது சமூகத்துக்கு கால ஓட்டத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் ஒரு காரணியாக மாறும்.

நமது கல்வி முறையின் படி அனேக மாணோர் குறைந்த வருமானத்தை உடைய அரச பதவிகளையே பெரிதும் விரும்பிப் படையெடுக்கின்றனர். இதனாலே ஒருபுறம் லஞ்ச ஊழல் மோசடிகளும் பதவியாசைகளும் தலைதூக்குகின்றன. மறுபுறம் சமூகம் பயன் பெறக்கூடிய சுயதொழில் வாய்ப்புகள் ஊக்குவிக்கப்படாதுள்ளது. தன் கையே தனக்குத் துணையென தனது கைகளையே நம்பி வாழ்க்கை நடத்த தேவைப்படும் அறிவினையும் திறனையும் அளிக்கத் தவறி பிறரைத் தங்கி வாழும் நிலையும் ஊழியர் வேலையின்மையும் தொழிற்பயிற்சி இன்மையால குறைந்த வினைத்திறனும் என தொழில் சார் நடவடிக்கையாலும் எமது கல்வித்திட்டம் தேவைகளை பூர்த்தி செய்வதாக அமையவில்லை.

மனிதரிடையே ஒற்றுமையினை வளர்க்க வேண்டிய எனது தாய்நாடு எனது தாய்மொழி என்ற பாசப் பிணைப்பு உடைத்தெறியும் வகையில் இத்துவேசத்தை ஏற்படுத்தக் கூடிய சமூகவியல் கல்வி முறைமை பிரிவினையை தூண்டுவனவாகவே உள்ளது

எனவே மொத்தத்தில் எமது இன்றைய கல்வி முறையானது திருப்திகரமானதாக அமையாததால் அதனை ஒரு தூரநோக்குப் பார்வையுடையதாக எமது சமுதாயத்தை எமது நாட்டின் அபிவிருத்திக்கு உந்துதல் அளிக்கும் வகையில் எமது சமூக வாழ்விற்கு உயிர்நாடியான கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும். இது இன்றைய காலத்தின் தேவையும் கூட.

Int. வே. செவ்வேட்குமரன்
(நிதி இயக்குநர்)

# விஞ்ஞானமும் அதன் வளர்ச்சியும்

விஞ்ஞானம் ஒரு அறிவுச் சமுத்திரம். ஒன்றைப்பற்றி ஆராய்வதும் அதைத் தர்க்க ரீதியாகச் சான்றுகள் காட்டி விளக்கமளித்தலும் விஞ்ஞானமாகும். இதில் பரிசோதனை வாயிலாக நிரூபிப்பதே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செயன்முறையாகும். பல விஞ்ஞானிகள் கொள்கைகளை வெளியிட்டு மக்கள் மத்தியில் பரிசோதனை வாயிலாக நிரூபித்து விதிகளை ஆக்கியுள்ளனர். இவர்களின் தொடர் ஆராய்ச்சியின்போது ஏற்படும் திடீர் விபத்துக்கள் புதிய கொள்கைகளை வெளியிட உதவி இருக்கின்றன. எனினும எதிர்பாராத விபத்துக்களால் பல தீமைகளும் ஏற்பட்டிருக்குகின்றன. ஆரம்ப காலத்தில் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தி எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில விதிகள் தற்பொழுது தவறானதாகவும் கருதப்படுகின்றன. ஒரு கொள்கையை வெளியிட்டவுடன் மட்டுமல்லாது தொடர்ந்தும் அது சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்ளுவதன் மூலம் விரிவான விளக்கங்களைப் பெறுவதுடன் மட்டுமன்றி அதிலுள்ள தவறுகளையும் திருத்தக் கூடியதாக உள்ளது.

உண்மையிலேயே பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு காலபபகுதி விஞ்ஞான வளர்ச்சியின பொற்காலமாகும. இக்காலப் பகுதியிலே விஞ்ஞானமானது வளர்ச்சியடைந்து காணப்படுகிறது. தற்காலத்தில் விஞ்ஞானம் மெஞ்ஞானத்தைவிட மிஞ்சி நிற்கிறது என்று சொன்னால் மிகையாகாது, ஏனெனில் விஞ்ஞானம நிரூபிக்கக் கூடியது. ஆனால மெஞ்ஞானமோ நிரூபிக்க முடியாதது. விஞ்ஞானமானது ஆதியும் அந்தமும் இல்லாதது ஆதிகால மனிதன் தனதுவாழ்க்கை முறையுடன் விஞ்ஞானத்தை முறையாகப் பயன்படுத்தவில்லை. மற்றைய விலங்குகள் போலவே உடல் வலிமையால் தனது அன்றாட தேவைகளை நிறைவேற்றினான். அப்போது மனித தேவைகளும் குறைவாகும். பின்னர் காலம் செல்லச்செல்ல மனிதனுடைய தேவைகள் அதிகரித்தன. இதனால் சிறிது சிறிதாக விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தது. மனிதன் இலகுவாக வாழ விரும்பினான். இதற்கு விஞ்ஞானத்தை வாழ்க்கை முறையுடன் நன்கு பயன்படுத்த முற்பட்டான். இதன மூலம் மனிதன் விலங்குகளிலிருந்து விடுபட்டு பிறிதொரு புதிய இலகுவான யுகத்தை நோக்கி வாழ்க்கைப் படகை திசை திருப்பினான். இதன்மூலம் தற்காலம் நவீன யுகமாக மாறியதுடன் மலர்ச்சியும் பெற்றுப் புதுப் பொலிவுடன் விளங்குகின்றது.

ஆரம்பகாலத்தில் மானிடர் சமயம் மீது அதீத பற்றுவைத்திருந்தனர் இவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றியதாக வாழ்க்கை முறையும் சடங்குகளும் அமைந்தன எனவே சமயத்திற்குக் கட்டுப்பட்டு இருந்தனர். இதனால் பல மூட நம்பிக்கைகளையும் கொண்டிருந்தனர். மதக்கோட்பாடுகள் இவர்களைக் குறுகிய வட்டத்தினுள் சிந்திக்க வைத்தது. அதாவது கிணற்றுத் தவளைகள் போலாகியது இக் காலத்தில் சில விஞ்ஞானிகள் கொள்கைளை மக்கள முன்வைத்தனர். இவற்றுள் சில சமயத்திற்கு முரணானதாகக் காணப்பட்டதால் விஞ்ஞானிகள் சிறைப்பிடிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டனர். இதுமட்டுமன்றி பல துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டனா. இதன் பின் ஏற்பட்ட மறுமலர்ச்சி காலப் பகுதியின் பின் மக்கள் சுயமாக சிந்திக்க செயலாற்ற முற்பட்டதன் காரணமாக விஞ்ஞானம் மக்களிடையே பரவியது. இதன் மூலம் பல காரியங்களை இலகுவாக செய்யலாம். என்ற நம்பிக்கை மக்களிடையே உதித்தது. இதனால் விஞ்ஞான வளர்ச்சியை ஆதாரித்தாாகள். இவ்வாறாக விஞ்ஞானமானது வளர்ச்சியடைந்தது.

தற்பொழுது எத்துறையை எடுத்துநோக்கினாலும் அங்கு உயிரும் உடலும் போல ஒன்றிணைந்ததாக விஞ்ஞானம் காணப்படுகின்றது. விஞ்ஞானத்தைப் பயன்படுத்த

துறையே இல்லை. ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்கினால் எல்லாம் விஞ்ஞான மயமேயாகும். உயிர்காக்கும் வைத்தியத் துறையிலே அங்கமாற்றீடு, செயற்கை முறையில் சிசுவை உட்பதித்தல் என்பனவும் விந்தைபுரியும் விண்வெளித்துறையில் நவீன செய்மதிகள், விண்வெளிகள் ஆய்வுகூடம், ரொக்கற்களும் வருமானம்தரும் வர்த்தகத்துறையில் இயந்திரமனிதன் கணனிகளின் செயற்பாடும் விளைச்சலை தரும் விவசாயத்துறையில் இழைய வளர்ப்புமூலம் புதிய தாவரப் பெருக்கமும் மக்களிடையே நவீன தொலைத் தொடர்புச் சாதனப்பயன்பாடு என்பனவும் விஞ்ஞான வளர்ச்சிக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும். இதுமட்டுமன்றி செயற்கை மழையை உருவாக்கல் போன்ற விஞ்ஞான உபாயத்தாலும், பாலை நிலத்தை சோலை நிலமாக்கல் போன்ற செயற்பாடுகளினாலும் சூழலைத் தனக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கின்றான். எதிர்காலத்தில் விஞ்ஞானப் படிமுறை வளர்ச்சி எப்படியிருக்கும் என்று எல்லோரும் சிந்திக்கவேண்டியுள்ளது.

மனிதன் மனிதனாக வாழ விஞ்ஞான முறையானது மிகமிக அவசியமான ஒன்றாகும். எனினும் தேவைக்கேற்ற விதத்தில் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் விஞ்ஞானத்தின் உச்ச பயன்பாட்டினை ஒவ்வொரு மனிதனும் பெறமுடியும். இதன் போது தான் விஞ்ஞானம் மேன் மேலும் வளர்ச்சி பெறும்.

எல்லாவற்றையும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்து விட்டார்களே நாங்கள் கண்டு பிடிக்க ஒன்றும் இல்லையே என்று நீங்கள் கவலைப்படத்தேவையில்லை ஏனெனில் விஞ்ஞானம் உலகளாவப்பரந்தது. சமுத்திரத்தைப் போல் ஆழமும் அகலமும் உடைய அறிவுத் தொகுதியாகும். இதில் இன்றும் எத்தனையோ விடயங்கள் கண்டறிய உள.

'கண்டறியப்பட்டது கைமண்ணளவு'
'கண்டறியப்படாதது உலகளவு'

Int வ. முதந்தன்
காவலர்


மலர் சிறக்க மனமார வாழ்த்துகிறோம் !

' நல்ல நூல்களையே அன்பளிப்புச் செய்வோம் '

துர்க்கா பொத்தகச் சோலை

( புகழ்பெற்ற பொத்தக வியாபாரிகளும் செய்தித்தாள் முகவர்களும் )

பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.

## மலர் சிறக்க உதவிய கரங்கள்

செல்வி V. லலிதா (டொக்டர் யாழ். போதனா வைத்தியசாலை)
திரு. K. ராஜசேகரம் (டொக்டர் யாழ். போதனா வைத்தியசாலை)
திரு. தி. வரதன் (உதவி அ. அ. பிரிவு)
திரு. செ. கொவின் (பல்கலைகழக மாணவன்)
திரு. மு. முரளீதரன் (விரிவுரையாளர் - கணிதம்)
திரு. P. சுதா (உதவி விரிவுரையாளர் கணிதம்)
திரு. சி. தயாபரன் (பொறியியலாளர் யாழ். பல்கலைக்கழகம்)
திரு N. சண்முகலிங்கம் (விரிவுரையாளர் யாழ். பல்கறைக்கழகம்)
திரு. S. பாலதயாபரன் (பல்கலைகழக மாணவன்)
திரு. ந. பகீரதன் (தேசியசேமிப்பு வங்கி சுன்னாகம்)
திரு. S. தேவதாஸ் (ஆசிரியர் வசாவிளான் ம. ம. வி.)
திரு R ரவீந்திரன் (ஆசிரியர்)
திரு. K. N. முகுந்தன் (நூல்நிலையம் யாழ். பல்கலைகழகம்)

## மகாஜன தீபம் சிறப்புற வெளிவர உதவிய கழக அங்கத்தவர்கள்

Int அ. சிறிபத்மநாதன்
Int சோ. சத்தியசீலன்
Int மா. குகதாசன்
Int த. கிஷ்ணராஜா
Int சு. சுஜாதரன்
Int சி. செந்தில்வாசன்
Int ம. மதீதரன்
Int மு. கிருபாரன்
Int ச. ரஜீவன்
Int இ. சிறிவத்சன்
Int க. அஜந்தன்
Int சி. கனேந்திரா
Int பா. கணேசானந்தன்
Int ச. கோகுலன்
Int வே. செல்வேட்குமரன்
Int க. தீபன்
Int வ. முகுந்தன்
Int வ. லதா
Int சு. சசிகலா
Int த. சாந்தகுமார்
Int கு. பாமினி

Int க. வாசுகீ
Int ம. சகிலா
Int கி. வசந்தராணி
Int ச. சுதர்சினி
Int ப. தயாசுகி
Int ச. கலைவாணி
Int ஆ. கலாஜினி
Int இ. சுதர்சினி
Int இ. தயாளினி
Int த. சிவரூபி
Int ம. லதாங்கி
Int ச. விஜயகுமாரி
Int க. வசந்தி
Int ச. நிலானி
Int க. தர்சினி
Int நீ. விஜயா
Int பா. சாந்தி
Int வா. கோமதி
Int மு. ஜெயநந்தினி
Int ந. நந்தினி
Int து. அனுஷா

Int ந. வைகுந்தன்
(பொருளாளர்)

மகாஜன தீப மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள் !

**விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்**

# எரிக் கணேஷ்

மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மகாஜன தீபம் மலர் சிறக்க

எமது நல் வாழ்த்துக்கள் !

**எங்கள் கையிலே உங்கள் வாழ்வு**

# சக்தி மருந்தகம்

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

மகாஜன தீபமே உனது சேவை தொடர எமது நல்வாழ்த்துக்கள் !

**கல்யாணி ஸ்பெஷல் ஐஸ் கிறீம்**

**சுவைத்து மகிழுங்கள்**

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மலர் சிறக்க வாழ்த்துகிறோம் !

**ராஜன்ஸ் இசைக்குழுவின் உறுப்பினரால்**

நடாத்தப்படும்

**ஓகன், கிற்றார், பயிற்சி நிலையங்கள்**

(1) தான்சன் கல்வி நிலையம், மருதனாமடம்

(2) சேர் பொன் இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி

(3) பருத்தித்துறை அல்வாய் வீதி, மாலுச்சந்தி

# புராதன இந்துக்களின் எண் ஞானம்

கணிதம் என்பதன் கரு 'எண்' ஆகும்.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்கிறது திருக்குறள் மனித நாகரீகத்தின் கணிப்பு அவனது அறிவு ஆற்றல் என்பவற்றில் அதிகம் தங்கியுள்ளது.

உரோமர்கள் நாகரீகமடைந்தவர்கள் என அறிவோம். அவர்கள் கிரேக்கர்களிடம் இருந்து நாகரீகத்தை அறிந்தார்கள் - கற்றார்கள். கிரேக்கர்களோ எகிப்தியர்களிடமிருந்து நாகரீகத்தை அறிந்தார்கள் எகிப்தியர் தமிழர்களிடமிருந்தே இந் நாகரீகத்தை அறிந்துள்ளார்கள் என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து ஆகும். புவியியல் ரீதியாகப் பார்க்கும்போது இது சேரநாட்டிற்கு மேற்கே அமைந்துள்ளது.

புராதன இந்திய மக்களின் கணிதத்திறமைக்கு எடுத்துக்காட்டு அவர்களது கணித ஆற்றலேயாகும். உரோமர்கள் ஒரு மில்லியன் என்னும் எண்ணைக் குறியீட்டில எழுதவேண்டுமாயின் அவர்களுக்கு ஒரு பெரிய சுவரளவு கடதாசி வேண்டும். காரணம் இவர்கள் 1000 தடவை M களை எழுதவேண்டியிருக்கும். ஆனால் இந்தியனோ 1,000,000 என மிகச் சுருக்கமாக எழுதிவிடுவான் இந்தியக் கணித மேதைகளின் கண்டுபிடிப்பு இந்தப் பூச்சியம் ஆகும்.

'பெறுமதியே அற்ற ஆனால் ஆற்றல் மிக்க என் உலகத்தின் ஒப்பற்ற உயிர் நாடியாக உள்ள பூச்சியத்தினைக் கண்டுபிடித்த இந்தியனது ஆற்றலுக்கு நிகர் இந்தப் பூச்சியத்தின் ஆற்றலே' என்று பூச்சியம்பற்றிப் பேசப்புகுந்த மேல் நாட்டு கணித விற்பன்னர் ஒருவர் கூறுகின்றார். இவ்வாறு இந்துக்கள் கணிதத்திலே ஆற்றல் மிக்கவர்களாக விளங்கினார்கள்.

மேல்நாட்டவர்களோ எதையும் நாதுக்காக இரவல்பெற்று அதை அனுபவிப்பதில் வல்லவர்கள் இந்தியர்களால் அனுபவிக்கப்பட்ட எண்கள் அரேபியர்களினூடு மேல் நாட்டிற்குச் சென்று இந்து அரேபிய எண் எனப் பெயர் பெற்றுள்ளது.

ஏன் சதுரங்கள் (Chess) என்றும் விளையாட்டு இந்தியருடையது ஆகும். இந்த விளையாட்டைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் ஸ்ரீராம் என்னும் அரசனின் மந்திரியான கிசாபெண்தாகூர் என்பவராவர் இக் கண்டுபிடிப்புக்காக ஏதாவது வெகுமதி கொடுக்க விரும்பிய அரசன் மந்திரியாரை அணுகி அவருக்கு விருப்பமான பரிசை கேட்கும்படி கூறினான். ஆனால் மந்திரியோ மதியூகி 'அரசே சதுரங்கப்பலகையில் அறுபத்து நான்கு சதுரங்கள் உள்ளன. முதலாவது சதுரத்திற்கு ஒரேயொரு கோதுமை மணியையும், இரண்டாவதற்கு இரண்டும் மூன்றாவதற்கு நான்கும் நான்காவதற்கு எட்டுமாக அறுபத்துநான்கு சதுரங்களுக்கும் கணித்து அவ்வளவு கோதுமை மணிதந்தால் போதும்' என்று கூறினார்.

அரசனுக்கோ பெருவியப்பு. இப்படியான ஒரு சிறந்த விளையாட்டை அறிமுகப் படுத்திய அமைச்சர் அற்பமான பரிசைக் கேட்கிறரே என்று யோசித்துவிட்டுப் பரிசு கொடுப்பதற்கு உத்தரவிட்டான். பாவம் அரசன், முதல் நாற்பது சதுரங்களுக்கே

அவனிடமுள்ள தானியக் களஞ்சியங்களிலுள்ள அத்தனைகோதுமை முடைகளும் முடித்து விட்டன அயல் நாடுகளில் தேடினாற்கூட அடுத்த நான்கு சதுரங்களுக்குக் கொடுக்கவே போதாது இருந்தது. அரசன் தனது கணிதமேதைகளை, தேவையான கோதுமையின் அளவைக் கணிக்கவிட்டபோது அவர்கள் கணிப்பின்படி உலகக் கோதுமை உற்பத்தியில் 2000 ஆண்டுகளின் கோதுமையை மந்திரிக்குக்கொடுக்க வேண்டியிருந்தது. அரசன் வியப் படைந்து தனது இராச்சியத்தினை மந்திரியிடங்கொடுத்து மீளப் பெற்றுக்கொண்டான் இதன் கணிப்பு பின்வருமாறு.

1, 2, 4, 8 ..........என்னும் பெருக்கல் விருத்தியிற் செல்லும். இதன் முதல் 64 உறுப்புக்களின் கூட்டுத்தொகை.

$$S_n = a\frac{(r^n - 1)}{r - 1} \text{ இல்}$$

$$a = 1, \quad r = 2, \quad n = 64$$

$$S_{64} = 1\frac{(2^{64} - 1)}{(2 - 1)} = 2^{64} - 1$$

இதனைக் கணித்தால் 18, 446, 744, 073, 709, 551, 651, தானியங்கள் வரும் ஏறத்தாழ 32 கிலோக்கிராமில் 5000000 தானியங்கள் உண்டு இதனால் உலக உற்பத்தியில் 2000 வருட உற்பத்தியை மந்திரிக்குக் கொடுக்க நேரிட்டது.

இதேபோல் படைப்பலத்திலும் தமது திறமைகளைக் காட்டியுள்ளனர் இது மிகவும் நுட்பமும் சிக்கலும் நிறைந்தது. இதுபின்வருமாறு.

யானை—1, தேர்—1, குதிரை—3, காலாள்—5, இவைபனைத்துஞ்சேர்ந்து ஓர் பத்தி எனப்படும்.

3 பத்தி—ஒருசேனாமுகம், 3 சேனாமுகம்—ஒருகுல்மம், 3 குல்மம்—ஒருகணம் 3 கணம்—ஒரு வாகினி, 3 வாகினி—ஒருபிரதனை, 3 பிரதனை—ஒருசமூ, 3 சமூ—ஒரு அகினி, 10 அகினி—ஒரு அக்ரோணி ஒரு அக்ரோணியில்.

தேர்—21870, யானை—21870, குதிரை—65610, காலாள்—109350.

பின்னர் 8 அக்ரோணி—ஒருஏகம், 8 ஏகம்—ஒருகோடி, 8 கோடி—ஒருசங்கம், 8 சங்கம்—1 விந்தம், ஒரு விந்தம்—ஒரு குமுதம் 8 குமுதம்—ஒருபதுமம் 8 பதுமம்—ஒருசமுத்திரம்.

யானை — 1, தேர் — 1. குதிரை — 3, காலாள் 5 இவை அனைத்தும் சேர்ந்து ஓர் பத்தி எனப்படும்.

3 பத்தி — 1 சேனாமுகம், 3 சேனாமுகம் — 1 குல்மம், 3 குல்மம் — 1 கணம், 3 கணம் — 1 வாகினி, 3 வாகினி — 1 பிரதனை, 3 பிரதனை — 1 சமூ 3 சமூ — 1 அகினி, 10 அகினி — 1 அக்ஷௌணி.

ஒரு அக்ஷௌணியில், தேர் — 21870, யானை — 21870, குதிரை — 65610 காலாள் 109350.

பின்னர் 8 அக்ஷௌணி — ஏகம், 8 ஏகம் — 1 கோடி, 8 கோடி — 1 சங்கம் 8 சங்கம் — 1 விந்தம், 8 விந்தம் — 1 குமுதம், 8 குமுதம் — 1 பதுமம், 8 பதுமம் — 1 சமுத்திரம் 8 சமுத்திரம் — 1 வெள்ளம்.

எனவே வெள்ளம் என்பது மிகப்பெரிய எண் என்பது கணிக்காமலே விளங்கும் இராமாயணத்தில் வரும் இராமசேனை 70 வெள்ளம் என்கிறது இராமாயணம் மேல்நாட்டவர்கள் ஒரு காலத்தில் ஒரு சில ஆயிரங்களையே கணிக்க இயலாத காலத்தில் இந்து ஒருவர்

கோடானு கோடிகளை இலகுவாகக் கணிக்கக் கூடிய ஆற்றல் பெற்று இருந்தான். என்றால் இந்து ஒருவனின் கணிதத்திறனும் அறிவு ஆற்றலும் எத்துணை பெரிது இதனை உணர்ந்து இந்துக்களாகிய நாங்கள் கணிதத்தில் விட்ட இடைவெளிகளை நிரப்பி ஆற்றல் பெறுவோமாக.

Int ச. கலைவாணி
(பத்திராதிபர்)

* * *


மகாஜன தீபமே நீ நீடூழி வாழ்க!

இன்றைய அறிமுகம் நாளைய நாகரீகம்

நகரப் பையன் தையலகம்

[சிற்றி போய்] பதிவு இல. 01/1797

☐ நவநாகரீகத்துக்கேற்ப ஆடைகள் தைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.
☐ எமக்கு வேறு கிளைகள் எதுவும் இல்லை.

181, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

மகாஜன தீப மலர் சிறக்க வாழ்த்துக்கள்!

பசுமை AGRO

சகல நீரிறைக்கும் தேவைகட்கும் நாடவேண்டிய இடம்
நவீண சிக்கன முறையான தூவல் பாசன முறை பற்றி
அறிந்து கொள்ள நாடுங்கள்.

விவசாய கைத்தொழில் எந்திரவியல் தொழிலகம்

V. C. View, Court Road, Mallakam.
Prop : Mrs. S Thavkulasingam

மகாஜன தீபத்திற்கு எமது வாழ்த்துக்கள்!

DMI

233, ஸ்ரான்லி வீதி, யாள்ப்பாணம்,

A/L வர்த்தகப் பிரிவு

கணக்கியல் : D. SAM வர்த்தகம் : பசில்
பொருளியல் : இராஜேஸ்வரன் அளவையியல் : சோதிலிங்கம்

மகாஜன தீப மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

# மோகன் பல்பொருள் வாணிபம்

Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

வாழ்த்துக்கள்!

**NITHIYA NAKAIAKAM**

தரமான தங்கப்பவுண நலககளை
நம்பிக்கையுடன் வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்

# நித்தியா நகையகம்

177/4, சந்தோசம் வீதி, (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம்.

மகாஜனதீப மலரே உனது சேவை தொடரட்டும்

# ராஜா ரேட் சென்டர்

எம்மிடம்

★ அலுமினியம் ★ பிளாஸ்ரிக் ★ எனாமல்

மற்றும் பானசிப் பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

இல. 3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# ஒழுக்கம் விழுப்பந்தரும்

வையத்து வாழ்வு வளமும் நலமும் நிறைந்ததாக இருக்கவேண்டும் என்றே யாவரும் விழைகின்றனர். வாழ்வாங்கு வாழ்வதற்கு சில விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுகல் வேண்டும். புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி நன்னெறி ஒழுகும் வாழ்வே இன்ப வாழ்வாகும். மனம்போன போக்கெல்லாஞ் சென்று, மதிகெட்டு வழி தவறி வாழும் வாழ்வில் இன்பம் எங்கே இருக்கிறது! எப்படியும் வாழலாம் என்றெண்ணாது இப்படித்தான் வாழவேண்டும் என்று எண்ணுபவனே தெய்வ வாழ்வு வாழ்பவனாவான்.

'தன்னைத்தான் காதலனாயின் எனைத்தோன்றும் துன்னற்க தீவினைப்பால்' என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழியாகும். ஒருவன் தன்னிலே தான் அன்புள்ளவனாயிருக்க வேண்டுமெனில் எவ்வளவு சிறிய தீய செயல்களையும் செய்யாதிருத்தல் வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

தன்னைத்தானே விரும்பாத மனிதர் தான் எல்லாச் சிறப்பும் பெற்று வாழவேண்டும் என்று எண்ணாத மனிதர் உலகத்திலே இல்லை. தன்னைத்தான் காதலிப்பவன் பிறருக்கு எவ்வித துன்பமும் செய்யாது நல்ல நெறியிலே ஒழுகுதல் வேண்டும்.

நல்ல ஒழுக்கமுடையவர்க்கு உறுதியான உள்ளம் உயர்வான எண்ணங்களின் உறைவிடமாகும். மனத்துக்கண் மாசில்லாதவன் மாண்புடைய வாழ்வு வாழ்பவனாவான். புலன்களின் வழிச்சென்று தன் ஆசைகளை நிறைவேற்ற முயல்பவன் எண்ணில்லாத துன்பங்களை எளிதில் அடைந்துவிடுவான்.

நமது முன்னோர் நமக்கு நல்ல நெறிமுறைகளை வகுத்துத்தந்துள்ளனர். தாமும் அவ்வழியிலே வாழ்ந்துகாட்டி அழியாத பெரும்புகழும் அடைந்துள்ளனர். அவர்கள் மனித நேயமும் மக்கட்பண்பும் நிறைந்தவராய் வாழ்ந்தனர். தனக்கென வாழப்பிறர்க்குரியவராய் மக்கட் சமுதாயம் உயர்நெறியில் வாழ உதவியவர்கள் ஆவர். அவர்கள் குணமென்னும் குன்றேறி நின்று, வாழ்வின் குறிக்கோளை மக்கட்குணர்த்தியவர்கள் தன்னுயிர்போல் மன்னுயிரை ஓம்பி பொய்யினைப் பெருக்கி பொழுதினைச் சுருக்காது அன்பினால், பண்பினால், ஒழுக்கத்தால் உயர்ந்து ஒளிவீடும் மாணிக்கங்களாய் திகழ்ந்தவர்கள். ஆசாரக்கோவை என்ற நூல் ஒழுக்கங்கள் எவை எவையென எடுத்துக் காட்டுகின்றது. அறிவினால் ஆகுவதுண்டோ? என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையாக 'பிறதின நோய் தன்நோய் போல் போற்றாக்கடை' எனக்கூறுகிறார். செந்நாப் புலவர் திருவள்ளுவர். பஞ்சமா பாதகங்களை நமது முன்னோர் விலக்கினர். தனக்கும் தனது சமுதாயத்திற்கும் தீங்கு விளைவிக்கும் எச் செயல்களையும் அறவே ஒழித்து வாழ்ந்தனர். கொலை, களவு, பொய், கள், காமம், இவை மனித வாழ்வின் சிறந்த குறிக்கோளை அழித்துவிடுகின்றன. பாவமீட்சி இல்லாத இளவாலிபர் பரவு மஞ்சதில்லாமனைபோலுமே என அப்துல் மஜீத்துப் புலவர் தமது ஆசாரக்கோவையில் உணர்த்தியுள்ளமை ஓர்ந்து உணரத்தக்கது.

ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதி நாம் வாழல் வேண்டும் ஒழுக்கமே நமக்கு விழுப்பத்தை உயர்வை தருகின்றது "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என வள்ளுவப் பெருமான் ஒழுக்கத்தை எடுத்துக் கூறுகின்றார். உலகம் வெறுக்கும் செயல்களை நாம் மனத்தினாலும் எண்ணக் கூடாது. பண்பும் பயனுள்ள வாழ்வுக்கு ஒழுக்கப் ஆணிவேர். எவ்வளவு உயர்ந்த கல்வி அறிவு இருந்தாலும் ஒழுக்கமின்றேல் அவ்வறிவினால் எவ்வித பயனும் கிடையாது உலகத்தோடு ஒட்ட ஒழுகல் உயர்வினையும் இன்பத்தையும் கொடுக்கும் மனித நேயம் மிக்கவர்களாய் தீய ஒழுக்கங்களில் ஈடுபடாதவர்களாய் மனித விழுமியங்களுக்கு மதிப்பளித்து பண்பும் பயனுமுள்ள வாழ்வு வாழ்வோமாக.

Int சி. கஜேந்திரா
(தலைவர் 95/99)

மகாஜன தீபமே தொடர்ந்து உன் பணியை
நிறைவேற்ற எம் இனிய வாழ்த்துக்கள் !

# நிரு ரியூசன் சென்ரர்

ஆண்டு 4 முதல் 11 வரையிலான வகுப்புக்கள்

A/L 95, 96 கலை, வர்த்தக, கணித வகுப்புகளும்

G. A. Q. யாழ்ப்பாணம், பேராதனை (1996)

விரிவுரைகளும் நடைபெறுகின்றன.

A/L 99 ம் ஆண்டு புதிய வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளது.

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

மகாஜன தீபமே உனது சேவை தொடர வாழ்த்துகிறோம் !

# பாரத் ஸ்ருடியோ

கறுப்பு, வெள்ளை படங்களும் கலர்ப் படங்களையும் அதி
நவீன மிச்சர் மூலம் படம் பிடித்திட பிரசித்தி பெற்றவர்கள்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மகாஜன தீபம் சிறப்புற வாழ்த்துகிறோம் !

# சோதி படப்பிடிப்பு கலையகம்

தரமிக்க வர்ணப் படங்களையும், திருமண கொண்டாட்டங்கள்
மற்றும் நந்நாட்கள் அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்.

## சோதி படப்பிடிப்பு கலையகம்

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மகாஜன தீப மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

உங்கள் புடவைத்தெரிவிற்கு நாடவேண்டிய ஒரே இடம்

# முருகன் புடவையகம்

6, பெரியகடை, [மேஜர் சோதீயா தெரு.] யாழ்ப்பாணம்.

மகாஜன தீப மலரே நீ என்றென்றும் வாழ்ந்துடுவாய்!

தரமான தங்கப்பவுண் நகைகளை
நம்பிக்கையுடன் வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்.

# சுபேந்திரன் நகைத்தொழிலகம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் உற்பத்தி செய்து வழங்கப்படும்

இல 313, Dr சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்,

மகாஜன தீபமே நீடுழி வாழ்க

சகலவிதமான அழகுசாதனப் பொருட்களும்
அன்பளிப்புப் பொருட்களும் பெற்றுக்கொள்ள

# இராஜேஸ்வரி ரேட்ஸ்

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

மகாஜனதீபமே உனது சேவைதொடர வாழ்த்துகிறோம்

சுவையான உணவுகளை பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஒரு இடம்

# உங்கள் உணவகம்

புகையிரத வீதி, சுன்னாகம்.

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

அசல் 22 கரட் தங்கத்தில் தரங்குன்றாத் தங்கநகைகளை

குறித்த காலத்தில் செய்துகொடுப்பவர்கள்

# வினோதா நகைப்பூங்கா

185, சந்தோசம் தெரு யாழ்ப்பாணம்.

மகாஜன தீபமே உனது சேவையைத் தொடர வாழ்த்துகிறோம்.

# விநாயகர் களஞ்சியம்

(எம். எஸ். கே.)

சுதுமலை வீதி, தாவடி.

மலர் சிறப்புற அன்புடன் வாழ்த்துகிறோம்.

# சிவா துவிச்சக்கரவண்டி திருத்தகம்

கே. கே. எஸ். வீதி, இணுவில்.

மகாஜன தீபமே நீ நீடூழி வாழ்க !

# லக்கி கல்வி நிறுவனம்

அளவெட்டி, சுன்னாகம்.

ஆண்டு 5 தொடக்கம் 11 வரையிலான வகுப்புக்கள் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த போதனையில் நடைபெறுகின்றன.

எமது ஆசிரியர் குழு

தமிழ் — திரு. இராஜகுலேந்திரன் சமூகக்கல்வி — திரு. சாம்சன்
கணிதம் — திரு மகேந்திரன் வர்த்தகம் — திரு. சுகுணன்
விஞ்ஞானம் — திரு. லிங்கநாதன் சமயம் — திரு. சிறீஸ்
ஆங்கிலம் — திரு. சுரேஷ்

O/L பகல் நேர வகுப்புகளும் நடைபெறுகின்றன.

---

மகாஜன தீபமே உனது சேவை தொடர வாழ்த்துக்கள் !

சகலவிதமான இரும்பு பொருட்களை பெறுவதற்கு நீங்கள் என்றும் நாடவேண்டிய இடம்

# ஜெய கிஸ்ணா

பல்பொருள் வாணிபம்

காங்கேசன் துறை வீதி, சுன்னாகம்.

மகாஜன தீப மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள்

அழகுசாதன அலங்கரிப்புப் பொருட்கள், நூல், லேஸ், பட்டின்
போன்ற பொருட்கள் பரிசுப்பொருட்கள் DSI BATA பாதணி
யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

# யோகு ஸ்ரோர்ஸின்

தரமான பொருட்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

பஸ்நிலைய முன்பாக, யாழ்ப்பாணம்.

---

மகாஜன மலர்சிறக்க எமது வாழ்த்துக்கள்

விவசாய உரவகையில் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# புநகர் உழவர் களஞ்சியம்

23, K. K. S. வீதி, சுன்னாகம்.

---

ஜன தீபம் சிறப்பு நடை போட்டு திகழ எமது வாழ்த்துக்கள் !

# துரித புகைப்பட சேவை

( Quick photo )

141/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

★ கலர்ப்புகைப்படச் சுருள்கள் பிறின்ரிங்
★ கலர்ப்புகைப்பட சுருள்கள் ★ புகைப்பட சாதனங்கள் விற்பனை

தொடர்பு நிறுவனங்கள் போட்டோ குறோம்,
மாஸ்டர்கலர், சிறிசாரா, லங்கா கலர் போட்டோ

---

மகாஜன தீபத்தின் சேவை தொடர வாழ்த்துகிறோம் !

# குமார் தையலகம்

ஆடவரே ! கண்கவரும் வனப்பான
உடைகள் பெற நாடத்தகு நிலையம்

ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

மகாஜன தீபம் வாழ்க என வாழ்த்துகிறோம் !

# ரஞ்சன் கைத்தொழிலகம்

- பெரிய உழவு இயந்திரப் பெட்டிகள்
- சிறிய உழவு இயந்திரப் பெட்டிகள்
- சிறிய உழவு இயந்திர கூடாரம்
- ரயர் வண்டிகள்

*என்பன குறித்த காலத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில்*

*நவீன முறையில் செய்து கொடுக்க இன்றே*

*நாடவேண்டிய இடம்*

## ரஞ்சன் கைத்தொழிலகம்

**புதிய, பழைய இரும்புகள் யாவும்**

**இங்கே விற்கப்படும்**

*நிரந்தர முகவரி :*

**வல்லுவத்தை, பன்னாலை, தெல்லிப்பழை.**

*தற்காலிக முகவரி :*

**வட்டுக்கோட்டை வீதி, சித்தன்கேணி,**

வாழ்க ! மகாஜன தீபமே.

தரமான பலசரக்கு பொருட்களை உங்கள் உடன் தேவைக்கு
உடனே நாடவேண்டி இடம்

## ஸ்ரீஸ்ரோஸ்

டாக்டர். சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

---

மகாஜன தீபமே ! நீ நீடுழி வாழ்க ......

## ராகவன் மோட்டார் வேக்ஸ்

வெல்டிங் மற்றும் ரிங்கர் வேலைகளை
துரித கதியில் செய்துகொளள நாடுங்கள்
எவ்வகை வாகனங்களானாலும்சரி செய்து தருபவர்கள்

**ராகவன் மோட்டார் வேக்ஸ்**

காளிகோவிலடி, மல்லாகம்.

---

## யாழ்தேவா கலையகம்

## YALLDEVA STUDIO

உங்கள் உயிரோவியமான நிகழ்வுகளை
அதிநவீன தொழில்நுட்பமுறையில் வெளிப்புற உட்புற
கலர்புகைப்படங்களை எடுத்திட என்றும் நாடவேண்டிய நிறுவனம்

கே. கே. எஸ். வீதி, ( இராமநாதன் கல்லூரிக்கு அருகாமை ) சுன்னாகம்

---

மகாஜன ! தீபமே உனது சேவை தொடரட்டும்

ஓடர் நகைகள் குறித்தத தவணையில்
உத்தரவாதத்துடன் உற்பத்திசெய்வோர்

## முருகன் ஆபாரண மஹால்

தங்கப்பவுண் நகை உற்பத்தியாளர்கள்

38, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

எமது இன்ரறக்ட் கழகத்தின் வெளியீடாக மகாஜன தீபம் என்றும் நூலை உங்கள்முன் வைத்துள்ளோம். இதனைச் சிறப்பாக வெளியீடுவ தற்கு உதவியோர் பலராவர்

எமது கல்லூரி அதிபர், பொறுப்பாசிரியர் ஆகிய இருவரும் ஏனைய ஆசிரியர்களும் வழிகாட்டிகளாக இருந்தனர். கற்றவர் கற்பவர் மிடுக் காய் உதவினர் சழக மாணவர் மனம்கொண்டு ஆக்கங்களை விரைந்தே தந்தனர். இவற்றிற்கு மேலாக இன்நூல் வெளியிட அதிபர், யாழ் நோட் டறிக் கழகத் தலைவர் திரு. சரவணபவன், இளைஞர் சேவை இயக்கு னர் திரு. ஸ்ரீ ரட்ணகுமார் யாழ் றோட்டறிக கழக செயலாளர் திரு. த. கிருநந்தகுமார், பொறுப்பாசிரியர் மற்றும் திரு. மு. சதீஷ்பாலமுருகன் ஆகியோர் ஆசியுரை நல்கி உதவினர் இவர்கட்கு எமது உளமார்ந்த நன்றி உரித்தாகும்,

மேலும் விளம்பரதாரர், விழுமிய நெஞ்சினர், விளம்பரம் நல்கிய நல் வர்த்தகர்கள். நிதியுதவி செய்த பழைய மாணவர்கள், சிரமம் பாராது நிர்வாக குழுவின் புகைப்படத்தை விரிவுபடுத்தியுதவிய திரு. அம்பிகைபாலன் இன்நூல் சிறப்புற உதவிய ‘95/96 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கலந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றோம்.

வண்ண அட்டைப்பட ஓவியம் வரைந்துதவிய திரு. இ. லங்கா அவர்கட்கும். இந்நூல் அழகுற அச்சிட்டு உதவிய முல்லை அச்சக உரிமை யாளர் திரு. க. மயில்வாகனம் அவர்கட்கும் ஏனைய அச்சக உதவியா ளருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் உவகை அடைகின்றோம். மற்றும் எம் தோளோடு தோள் சேர்ந்து உதவிய அனைவர்க்கும் நன்றி யை தெரிவித்து எம் கரங்கள் வலுக்க உமபணி தொடர வேண்டுமென சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

“உங்கள் துணையே எங்கள் வெற்றி”

நன்றி

பத்திராதிபர்

இம்மலர் வெளிவர எமக்கு உதவிய

எமது விளம்பரதாரர்களை

என்றும் ஆதரியுங்கள்.

# ரவி ஒளிகானம்

(சுப்பஸோ வீடியோ)

உங்கள் இல்லத்தில்

* மாலை சூடும் மணநாளா ?
* பருவங்கனிந்த பாவைக்கு இதயம் கனிந்த நந்நாளா ?
* மழலைகளை மகிழ்வூட்டும் பொன்னாட்களா ?

எவையாக இருந்தாலும் அவற்றை உங்கள் எண்ணத்தில்
நிழலாடும் வகையில் தக்க கோணங்களில்
அதி நவீன வீடியோ மிக்சர் கமராக்களினூடாக
கைதேர்ந்த உங்கள நண்பர்களினால் துல்லியமான
வீடியோப் படங்களாக்கித் தர
அன்றும் இன்றும் என்றும் முன்னிற்பவர்கள்

**ரவி ஒளி கானத்தினர்**

அது மட்டுமா

நிகழ்வுகள் நினைவை விட்டு அகன்றுவிடக் கூடாது என்பதனை மனதில்கொண்டு வர்ணம்மிக்க புதுமைகள் நிறைந்த புகைப்படங்களும் பிடித்துக் கொடுப்பவர்கள்

# சிறி போட்டோ கலையகம்

22/2, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.

இவற்றுடன் அண்மையில் வெளியான 'கொம்பெட்டிக்ஸ்' மூலம் பழைய புதிய பாடல்களை உங்கள் விருப்பத்திற்கேற்ப பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம். மின் உப கரணங்களை பழுது பார்த்து கொடுக்கவும் ஒரே ஸ்தாபனம்

**ரவி ஒளிகானம் (சுப்பஸோ வீடியோ)**

100 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய சரித்திரம்தனை படைக்க எழுந்துவரும்
மகாஜன தீபத்தை
வாழ்த்துவதிலும் நல்லாசிகள் வழங்குவதிலும்
பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

# லிங்கம் கூல் பார்

52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

மூல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி' கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.